# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 தை 27 வெள்ளிக்கிழமை (09-02-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:74


## சமாதானப் பேச்சு எனக் கூறிக்கொண்டு

# அரசாங்கம் மீண்டும் போர் பட்ஜெட்;

# பாதுகாப்புக்கு 6,339 கோடி ரூபா!

## கடன்படு தொகையும் அதிகரிப்பு!

கொழும்பு,பெப்ரவரி9

**சமாதானப் பேச்சுக்கள் குறித்துப் பெரிதாகப் பேசிக்கொள்ளும் அதேவேளை, அரசாங்கம் இந்த வருடத்துக்கான வரவு - செலவுத் திட்டத்தை போர் பட்ஜெட்டாகவே சமர்ப்பித்துள்ளது.**

**பாதுகாப்புச் செலவுக்கென 6,338 கோடியே 90 லட்சம் ரூபா வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த வருடத்தில் பாதுகாப்புச் செலவுக்கென 5,243 கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் உண்மையான மொத்தச் செலவு 8,000 கோடி ரூபாவரை உயர்ந்தது. அதேவகையில் இவ்வருடத்தின் உண்மையான பாதுகாப்புச் செலவு 10,000 கோடி ரூபாவுக்கு உயரலாம் என்று மதிப்பிடப்படுகிறது.**

விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போராடுவதற்காக என்றும் இல்லாதவாறு பாதுகாப்புக்கு அரசாங்கம் அதிக நிதியை ஒதுக்குவதாக ஏ.எவ்.பி.செய்தி நிறுவனம் விமர்சித்தது.

புதிய அரசாங்கத்தின் முதலாவது வரவு - செலவுத் திட்டத்துக்கான உத்தேச மதிப்பீட்டை பிரதி நிதி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

அரசாங்கத்தின் இந்த வருடத்துக்கான உத்தேச வரவு 24,779 கோடி ரூபாவாகும். உத்தேச செலவினம் 31,497 கோடியே 70 லட்சம் ரூபா. துண்டுவிழும் தொகை 6,718 கோடியே

(14ஆம் பக்கம் பார்க்க)

## அரசமைப்புச் சீர்திருத்தத் திட்டம் பேச்சுக்கான அடிப்படையாகாது!

### புலிகள் நிராகரிப்பு

கொழும்பு,பெப்.9

இனப்பிரச்சினைக்கான தீர்வாக ஸ்ரீலங்கா அரசு முன்வைத்த அரசமைப்புச் சீர்திருத்தத் திட்டத்தை விடுதலைப்புலிகள் மீண்டும் நிராகரித்துள்ளனர்.

அரசு முன்வைத்துள்ள அரசமைப்புச் சீர்திருத்தத் திட்டம் பேச்சுக்கான அடிப்படையாக ஒருபோதும் அமைய முடியாது என்று விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் சர்வதேச இணையத் தளத்தில் இத்தகவல் வெளியிடப்பட்டிருக்கிறது.

அரசமைப்புச் சீர்திருத்தத் திட்டமே விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்கு அடிப்படையாக அமையும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சுதந்திரதின உரையில் குறிப்பிட்டிருந்தார்.

அது குறித்துக் கருத்து தெரிவித்த அன்ரன் பாலசிங்கம் - "அரசமைப்புச் சீர்திருத்த யோசனைகள் பேச்சுக்கான அடிப்படையாக அமைய முடியாது. பாரம்பரிய தாயகம், இனத்துவ அடையாளங்கள், சுயநிர்ணய உரிமை ஆகியனவே பேச்சுக்கான அடிப்படையாக அமைய வேண்டும்" என்று தெரிவித்துள்ளதாக புலிகளின இணையச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3-6)

## பாலசிங்கத்தை லண்டனில் சொல்ஹெய்ம் சந்தித்தார்

நோர்வேயின் விசேட தூதர் எரிக் சொல்ஹெய்ம் விடுதலைப் புலிகளின அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை கடந்த செவ்வாயன்று சந்தித்துப் பேச்சு நடத்தியதாக அறிவிக்கப்படுகிறது.

நான்கு நாள்கள் அரசுத் தரப்புடன நடத்திய பேச்சுக்களை அடுத்து கடந்த சனிக்கிழமை கொழும்பில் இருந்து புறப்பட்ட எரிக் சொல்ஹெய்ம் செவ்வாயன்று லண்டனில் பாலசிங்கத்தைச் சந்தித்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உட்பட ஏனைய தலைவர்களுடன் நடத்திய பேச்சுக்களின் விவரங்களை அவர் பாலசிங்கத்துக்கு எடுத்துக் கூறியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இருவருக்கும் இடையில் நடந்த பேச்சுக்களின் விவரங்கள் எவையும் வெளியாகவில்லை. (ஐ-3-6)

## பிரிட்டிஷ் தூதரிடம் மட்டு. ஆயர் கோரிக்கை

மட்டக்களப்பு,பெப்.9

சமாதான முயற்சிகள் கனிந்து வரும் இந்த நேரத்தில் பிரிட்டனில் விடுதலைப் புலிகளைத் தடைசெய்யக் கூடாது.

இப்படிக் கோரிக்கை விடுத்தார் மட்டக்களப்பு - திருமலை ஆயர் அதிவண.கிங்ஸ்லி சுவாம்பிள்ளை. மட்டக்களப்புக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பிரிட்டிஷ் தூதர் லிண்டா ஜோய் டபீல்ட் அம்மையாரிடமே இந்தக் கோரிக்கையை அவர் விடுத்தார். (ஐ-3)

## சாரம் அணிந்து மீன் பிடிக்க அனுமதி

குருநகர்,பெப்.9

குடாக்கடலில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்கள், சாரம், சேட் அணிந்து செல்ல விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடு நீக்கப்பட்டிருப்பதாக குருநகர் மீனவர் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

ஈ.பி.டி.பி அமைப்பினர் 512ஆவது படைப்பிரிவு அதிகாரிகளுடன் பேசியதை அடுத்து மீனவர்கள் மீது விதிக்கப்பட்டிருந்த தடைகள், கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-51)

## கைதடி வீடுகளைப் பார்க்க இன்று மக்களுக்கு அனுமதி

யாழ்ப்பாணம்,பெப்.9

கைதடிப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை அங்கு மீளக் குடியமர்த்த வசதியாக அப்பிரதேச மக்கள் இன்று தமது வீடுகளைச் சென்று பார்வையிட ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகப் படைத்தரப்பு அறிவித்துள்ளது.

தமது வீடுகளைப் பார்வையிட விரும்பும் கீழ்க் குறிப்பிடப்பட்ட கிராம சேவை அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களை இன்று காலை 9.30 மணிக்கு கோப்பாய் சந்திப் பகுதிக்கு சமுகமளிக்குமாறு 52 ஆவது இராணுவப்பிரிவு கேட்டுள்ளது.

கிராசேவை அலுவலர் பிரிவு விவரம் வருமாறு:-

(14ஆம் பக்கம் பார்க்க)

## பயணிகள் கப்பல் சேவை குறித்து

## ஈ.பி.டி.பி. - கூட்டணி எம்.பிக்கள் சபையில் நேற்று வாக்குவாதம்

கொழும்பு,பெப்.9

யாழ்ப்பாணத்துக்கும் வெளியிடங்களுக்குமான பயணிகள் கப்பல் சேவை தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரிக்கும் ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். தவராசாவுக்கும் இடையே நேற்று நாடாளுமன்றத்தில் காரசாரமான வாக்குவாதம் இடம்பெற்றது.

அவசரகாலச் சட்ட நீடிப்பு பிரேரணை மீதான விவாதத்தின்போதே இந்த வாக்குவாதம் ஏற்பட்டது.

ஆனந்தசங்கரி அங்கு பேசுகையில் -

யாழ். - திருமலை சேவையில் ஈடுபடும் பயணிகள் கப்பலுக்கு கூடுதலான கட்டணத்தை மக்கள் செலுத்த வேண்டியுள்ளது. பொதுமக்கள் அந்தக் கப்பலில் பயணம்செய்ய மூன்று மாத காலம் காத்துக்கிடக்க வேண்டியுள்ளது. ஆனால் ஒரு சிலரால் ஒரு நாளிலேயே பயண ஏற்பாட்டைச் செய்ய முடிகிறது. ஈபிடிபி. அந்தச் சேவையை பொறுப்பேற்ற பின்பே இந்த நிலை ஏற்பட்டுள்ளது. முன்னர் இந்தச் சேவை ஓரளவு ஒழுங்காக இடம்பெற்று வந்தது - என்று தெரிவிததார்.

அச்சமயம் தவராசா எழுந்து, ஈபிடிபி.அந்தச் சேவையைப் பொறுப்பேற்கவில்லை வடமாகாண மீள் குடியமர்வு புனர்வாழ்வு அதிகார சபையே அப்பொறுப்பைக் கவனிக்கிறது - என்று கூறினார்.

இதைத் தொடர்ந்து இருவருக்கும் இடையில் கடும் வாகுவாதம் இடம்பெற்றது. (ஐ-3)

### நாடாளுமன்றில் 'உதயன்'

கொழும்பு,பெப்.9

அவசரகாலச் சட்ட நீடிப்பு பிரேரணை மீதான விவாதத்தின்போது 'உதயன்' பத்திரிகை நாடாளுமன்றம் வந்தது.

விவாதத்தின்போது யாழ்ப்பாண நிலைமைகள் பற்றி தமிழர் விடுதலைக்கூட்டணி உறுப்பினர் வீ. ஆனந்தசங்கரி பிரஸ்தாபித்து உரையாற்றினார்.

அவ்வேளை யாழ்.நகர வர்த்தகர்களிடம் பணம் வசூலிப்பது தொடர்பாக ரெலோ, ஈபிடிபி. ஆகிய கட்சிகள் வெளியிட்ட அறிக்கைகள் வெளியான 'உதயன்' பத்திரிகைப் பிரதிகளை ஆனந்தசங்கரி சபையினருக்குக் காட்டினார். அச்சமயம் குறுக்கிட்டுப் பேசிய ஈ.பி.டி.பி. உறுப்பினர் எஸ்தவராசா தமது அமைப்புக்கும் ரெலோவுக்கும் இடையே மோதலை உருவாக்க ஆனந்தசங்கரி முயற்சிப்பதாகக் குற்றஞ்சாட்டினார். (ஐ-3)

## சமாதானப் பேச்சை தடுத்து நிறுத்துங்கள்!

### பௌத்த சம்மேளனம் அறைகூவல்

கொழும்பு,பெப்.9

சமாதான முயற்சிகள் என்ற பெயரில் நச்சுத்தன்மையான சதி நடைபெறுகிறது. எனவே சமாதானப் பேச்சு ஆரம்பிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும். சிங்களத் தேசிய இனம் அதற்கான நடவடிக்கைகளில் உடனடியாக இறங்கவேண்டும்.

பௌத்த அமைப்புகளின் சம்மேளனம் மேற்கண்டவாறு அறைகூவல விடுத்துள்ளது.

விடுதலைப் புலிகளுடனான சமாதான முயற்சிகள் தொடர்பாக பௌத்த சம்மேளனம் கொழும்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறது.

அரசமைப்புச் சீர்திருத்தச் சட்டமூலம் மீளப் பெறப்பட்டதை அடுத்து சமாதானம் குறித்த புதிய திட்டம் ஒன்றைப்பற்றி ஜனாதிபதி பேசத் தொடங்கியுள்ளார்.

அரசமைப்பு நடைமுறைகளைச் சூழ்ச்சித்தனமாக மாற்றுவதன் மூலம வடக்கில் ஒரு சமஷ்டி அரசை ஏற்படுத்துவதே அதன் நோக்கம் புதிதாக அமைச்சு ஒன்றை நிறுவுவதற்கு அரசமைப்புத் திருத்தம் எதுவும் அவசியமல்ல. எனவேதான் வடக்குப் புனர்வாழ்வு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சு என்னும் புதிய அமைச்சை உருவாக்கி ஈழம் வாதியான டக்ளஸ் தேவானந்தாவிடம் வழங்கியிருக்கிறார் ஜனாதிபதி.

இந்த அமைச்சு தமிழர் தாயகம் எனப்படும் பிரதேசத்தை உள்ளடக்குகிறது. விடுதலைப் புலிகள் கேட்பது போன்று மரபுவழித் தாயகம் என்னும் விடயம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படக்கூடாது.

நாட்டில் புதிய அரசு நிறுவப்பட்ட கையோடு நோர்வேயின் தூதர் பிரபாகரனை வன்னியில் சந்தித்தது பற்றிய செய்திகள் வெளியாகின.

இச்சதியின் அடுத்த கட்டமாக ஜனாதிபதியையும் லண்டனில் அன்ரன் பாலசிங்கத்தையும் சொல்ஹெய்ம் சந்தித்தார்.

நடைபெற்றுவரும் நிகழ்வுகளை உற்று நோக்குகையில் ஸ்ரீலங்கா அரசு, பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க., விடுதலைப் புலிகள், தமிழ்க் கட்சிகள், நோர்வே, பிரிட்டன் ஆகியவற்றின் மத்தியில் ஒரு சதித்திட்டம் இருப்பது புலனாகிறது - என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## கைதடிப் பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்தவர்களை மீளக் குடியமர அனுமதித்தல்

தென்மராட்சி பிரதேசச் செயலர் பிரிவில் உள்ள கீழ்க் காணும் கிராம சேவையாளர் பகுதியில் வாழ்ந்த குடும்பங் களை மீளக்குடியமர அனுமதிப்பதற்கு இராணுவம் இணக்கம் தெரிவித்துள்ளது. எனவே கீழ்க்காணும் கிராம சேவகர் பிரிவில் வதியும் குடும்பங்களின் குடும்பத்தினரோ அன்றி அவ ருக்குப் பதிலாக வேறு ஒருவரோ தமது வீடுகளைப் பார்வை யிட்டு வருவதற்கு அனுமதிக்கப்படவுள்ளனர். விரும்பியவர்கள் இம்மாதம் 09ஆம் திகதி (இன்று) காலை 9.30 மணிக்கு கோப்பாய் கைதடிச் சந்தியில் சமுகம் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். அன்றைய தினம் தமது வீடுக ளைப் பார்வையிட்டு மீண்டும் குடியிருப்பதைத் தீர்மானித்துக் கொள்ளலாம்.

1. J/288 .................... கைதடி வடக்கு
2. J/289 .................... கைதடி கிழக்கு
3. J/290 .................... கைதடி மத்தி
4. J/291 .................... கைதடி தெற்கு
5. J/292 .................... கைதடி தெற்கு கிழக்கு
6. J/293 .................... கைதடி மேற்கு

இவ்வேளை தென்மராட்சிப் பிரதேச செயலரும் உரிய கிராம சேவையாளர்களும் கோப்பாய் கைதடிச் சந்தியில் சமுகம் கொடுக் கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

*- 52 ஆம் இராணுவப் பிரிவு.*

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்/சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாசாலை அதிபர்

### திரு.க.சந்திரசேகரன் அவர்கள்


அதிபர் தரம் 2. Iக்கு பதவி உயர்வு பெற்றதையிட்டு அராலி அம்மன் துணையோடு அவரின் சேவை மேன் மேலும் சிறப்புற பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யாழ். சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயம்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

(83950)

## 31 ஆவது நாள் நினைவஞ்சலி

தோற்றம் 02 - 04 - 1942



மறைவு 10 - 01 - 2001

### அமரர் சின்னத்தம்பி பொன்னுத்துரை

(துணைப்பு, சாவகச்சேரி)

எம் இதயத்தில் பூவாய் – மலர்ந்திட்ட
இல்லத்தரசனே – இனியவனே
நா தழுதழுக்க கரங் கூப்பி
கண்ணீர் மல்கி
இந் நாளில் உன் தெய்வீகம் – மிக்க
பாதங்களில் வணங்குகிறோம்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தகவல்:
பொன்னுத்துரை ஞானசேகரன் குடும்பத்தினர்.
(மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்)

*4ஆம் வட்டாரம்,*
*வேலணை,*
*துறையூர்.*

(83946)

### பூசை வழிபாடு

குருநகர்,பெப்.9

பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் தற்போது வாரத்தில் இரு பூசைப் பலிகள் நடைபெற்று வருவதாக ஆலய நிர்வாகம் தெரி வித்துள்ளது. (ஜ-51)


### ஸ்ரீ செல்வா சினிமா
யாழ்ப்பாணம்
தினசரி:10.30 - 2.30 (ப.நே.)
அப்பாஸ், மாதவன், லைலா, விவேக்
மின்னலே
புதிய வெளியீடு (C.D. பிரதி)
(83954)

### ராஜா
யாழ்ப்பாணம்
விஜயகாந்த், தேவயானி, ரகுவரன், அம்பிகா மற்றும் பலர் நடிப்பில்
வல்லரசு
காட்சிகள்: 10.30, 2.30 (பு.நே.)
(C/15058)

### நாகம்ஸ்
சுன்னாகம்
இன்று முதல்
பிரபுதேவா-சரத்குமார் ஜெயாசீல் நடித்த
பெண்ணின் மனதைத்தொட்டு
(நீல்ஸ்)
காட்சிகள்:11.00, 2.30 (புதிய நேரம்)
(83942)


## நினைவில் நீங்கா ஓராண்டு நினைவஞ்சலி



### அமரர் சின்னத்தம்பி சண்முகம்

தோற்றம் 25-05-1927 | திதி:09-02-2001 | மறைவு 22-01-2000

**மாதங்கள் பன்னிரண்டு மாயமாய்**
**மறைந்து ஆண்டு ஒன்று ஆனதே ஐயா!**
**உங்கள் அன்பும் பரிவும் பாசமும்**
**எமது நெஞ்சை விட்டு அகலாது!!**

*உங்கள் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

*இல.7,இராமநாதன் வீதி,*
*நாச்சிமார்கோயிலடி,*
*யாழ்ப்பாணம்.*

(83947)

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

*இந்தியாவின் சுதந்திரத்தை அன்னியரிடம் இருந்து மீட்டெடுத்த அண்ணல் காந்தியின் தாரக மந்திரம் -*

"ரகுபதி ராகவ ராஜா ராம்"
"பதித பாவன சீதாராம்"

*ஈழத்தில் பழம் பெரும் தலைவர் அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் தாரக மந்திரம்:*

"தமிழன் என்று சொல்லடா"
"தலை நிமிர்ந்து நில்லடா"

***இன்று அவரின் 24 ஆவது நினைவு தினத்தில்** தமிழ் இனமும் அக்கட்சியினரும் சேர்ந்து அவருக்கு நினைவு அஞ்சலியைச் செலுத்துகின்றார்கள்.*





### அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலம்

*1944 ஆம் ஆண்டு முற்பகுதியில் வடக்கு - கிழக்கில் சிங்களக் கட்சியின் பிரதிநிதித்துவமும் ஆதிக்கமும்தான் இருந்தது. இதை உணர்ந்து தமிழனுக்கு என்று ஒரு கட்சி வேண்டும் என்று அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் 1944 ஆம் ஆண்டுப் பிற்பகுதியில் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள கல்விமான்கள், அறிவாளிகள், பொதுஸ்தாபனங்களுடன் சமயத் தலைவர்கள் ஆகிய பலதரப்பினருடனும் கலந்தாலோசித்து தமிழனுக்கு என்று ஒரு கட்சி அமையவேண்டும் என்று சொல்லி அவர்களின் ஆசியுடன் 29.08.1944 இல் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸை நிறுவினார். தமிழ் மக்களுக்காக முதன்முதல் உதயமான கட்சி அது. அக்கட்சியின் தலைவராகவும் பதவி ஏற்கும்படி தமிழ்மக்கள் அவரை ஆணையிட்டார்கள்.*

*தலைவர் ஜீ.ஜீயின் மறைவுக்குப் பின், அவரின் புதல்வன் குமார் பொன்னம்பலம் இக்கட்சியைப் பொறுப்பேற்றார். இக்கட்சியின் ஆதரவாளர்கள் அவரையே இக்கட்சியின் தலைவராக வரவேண்டும் என்று ஏகமனதாகத் தெரிவுசெய்தார்கள். அவர் தமிழ் இனத்துக்காக உள்நாட்டிலும், வெளி நாட்டிலும் குரல் கொடுத்தார். தனது வாழ்நாளில் அரைவாசி நாள்களை தமிழினத்துக்காகக் குரல்கொடுக்கச் செலவிட்டார். அக்காலகட்டத்தில் சிங்கள இனவாதிகளினால் படுகொலை செய்யப்பட்டார்.*

*அதன்பின் -*

*அமரர் ஜீ.ஜீயின் அரசியல் வாழ்க்கையில் அவருடன் சேர்ந்து இளம் வயதில் கட்சித் தொண்டனாகவும் கட்சிச் செயற்குழுவில் முக்கிய அங்கத்தவராகவும் செயற்பட்ட அ. விநாயகமூர்த்தி அவர்கள் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கட்சிக்கு விசுவாசத்துடனும் தமிழ் இனத்துக்கு விசுவாசமுடனும் முன்னெடுத்துச் செல்கிறார்.*

**அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்,**
**120, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**

(83939)

# உதயன்

## மறக்கப்பட்ட காணாதோர்

ஐந்து வருடங்களுக்கு முன்னர் — 1996 ஜூலை, ஒகஸ்ட் மாதங்களில் — காணாமற் போனோர் குறித்து அரசாங்கமும், அரசியல் வாதிகளும் அனேகமாக மறந்து போனார்கள்! ஆனால் தங்கள் பிள்ளைகளை, கணவர்மாரை, சகோதரரைக் காணாது தவிக்கும் பெற்றோர்கள், மனைவி, பிள்ளைகள், உறவினர்களால் எப்படி மறக்க முடியும்...?

அதனால் அவர்கள் தமக்கு விமோசனம் பெற்றுத்தரக் கோரி, ஐக்கிய நாடுகள்சபையின் மனித உரிமைகள் அலுவகத்துக்கு மகஜர்ஒன்றை அனுப்பி வைத்திருக்கிறார்கள்.

அந்த மகஜரில் காணாமற் போனோர் விவகாரம்ஆதியோடு அந்தமாக — ஆனால் சுருக்கமாக — சொல்லப்பட்டுள்ளது.

காணாமற் போனோர் விவகாரத்தில் அரசாங்கம் ஆரம்பத்திலிருந்தே மிக அசமந்தமாகவே இருந்தது. வீடுகளில் வைத்துக் காரணம் தெரிவிக்காமல் கைது செய்யப்பட்டும், வீதிகளில் செல்லும் போது எவருக்கும் தெரியாமலே கைது செய்யப்பட்டும் காணாமற்ரோனவர்களைக் கண்டு பிடிக்க அவர்களின் உறவினர்களுக்கு மார்க்கம் தெரியவில்லை. அதனால் தமக்கு உதவுமாறு பெற்றோர்கள் பாதுகாவலர்களின் பிரதிநிதிகள் ஜனாதிபதியை நேரில் சந்தித்து தமது கண்ணீர்க் கதைகளைக் கூறினார்.

இது சம்பந்தமாக விசாரணை நடத்தி, ஆராய்ந்து, தேடிக்கண்டு பிடிக்க ஆணைக்குழு ஒன்றை ஆறு மாதங்களுக்குள் நியமிப்பதாகக் கூறினார் ஜனாதிபதி. தாமும் ஒரு தாய் என்பதால் இது விடயத்தில் தாம் அக்கறையுடன் செயற்படுவதாக உறுதி அளித்தார். ஆனால் வருடங்கள் கழிந்தும் இன்னும் ஆணைக்குழுவும் இல்லை, அக்கறையும் இல்லை, என்றாகி விட்டது. மனிதநேய ரீதியான அக்கறை கூடக் காட்டப்படவில்லை.

மனித உரிமைகளைப் பேணுவதிலும், குற்றமிழைக்கும் படையினரைத் தண்டிப்பதிலும் தமக்கு அதித அக்கறை உண்டு என்று வெளி உலகத்துக்குக் காட்டுவதற்காக — பிரசார நன்மை பெறுவதற்காக —

கிருஷாந்தி கொலை வழக்கு நடத்தியும், அவ்வழக்கின் எதிரிகளில் ஒருவர் செம்மணிப் புதைகுழிகள் குறித்து வெளியிட்ட தகவல்களின் அடிப்படையில் புதைகுழிகளைத் தோண்டியும் —

அரசாங்கம் சலசலப்புக் காட்டியது!

ஆனால் காற்புள்ளி வைக்குமளவுக்குத் தானும் பலாபலன் எதுவுமில்லை. எல்லாம் வெறும் பம்மாத்தாகிவிட்டன. தேர்தல் காலத்தில் இவ்விடயத்துக்குப் பிரசித்தம் கொடுத்த அரசிற்கு ஆதரவு நல்கும் தமிழ் அரசியல்வாதிகளாலும் எதுவும் செய்யமுடியவில்லை! பாதிப்புற்றவர்களுக்கு உதவமுடியவில்லை.

இத்தகைய சூழ்நிலையில் தமது உறவுகளுக்கு என்ன நேர்ந்தது, என்னவானார்கள் என்பதனை அறிய முடியாது வெறும் நடைப்பிணங்களாக வாழ்நாளை நகர்த்தும் சம்பந்தப்பட்ட குடாநாட்டு மக்களுக்கு இனி ஐ. நா. சபை போன்ற அமைப்புகளை நாடுவதைவிட வேறு வழியென்ன?

தமிழர்களாகப் பிறந்த ஒரேயொரு குற்றத்துக்காக இந்த நாட்டில் எண்ணற்ற முறைகளில், வகைகளில் அவர்கள் வதைக்கப்படுகின்றனர். ஆட்சி உரிமை அவர்கள் கைக்கு வராதவரை இவை தொடரும்.

# சிங்களவர்- தமிழர் சமபிரதிநிதித்துவ கோட்பாட்டை முன்வைத்து அதற்காக போராடிய தலைவர் ஜி.ஜி.

## இன்று அவரது 24 ஆவது அமரத்துவ தினம்

தமிழ் மக்களின் உரிமைக்காகவும் நலன்களுக்காகவும் இறுதி வரை போராடிய மாபெரும் தலைவர் ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்களின் நினைவு தினம் இன்றாகும். 1977 ஆம் ஆண்டு பெப்ரவரி ஒன்பதாம் திகதி அமரத்துவம் எய்திய ஜி. ஜி பொன்னம்பலம் சட்டத்துறையிலும் அரசியலிலும் வெளிப்படுத்திய தனித்துவ திறமைகள் தமிழினத்துக்குப் புகழ் சேர்ப்பனவாக அமைந்தன.

இங்கிலாந்தில் சட்டக் கல்வியைப் பூர்த்தி செய்து பட்டம் பெற்று இலங்கை திரும்பிய ஜி. ஜி. பொன்னம்பலம் சட்டத்துறையில் மிகவும் பிரபல்யம் பெற்ற சட்டத்தரணியாக விளங்கினார் சட்டத் துறையுடன் நின்று விடாது அரசியலில் பிரவேசித்து தமிழர்களின் சமுதாய அரசியல் ஏற்றத்துக்காகவும் கடுமையாக உழைத்தார் 1920 ஆம் ஆண்டளவில் இலங்கை உயர் நீதிமன்ற அத்துவக்காத்தாக தன்னைப் பதிவு செய்து கொண்ட அவர் அப்போதே அரசியலிலும் ஈடுபட்டார்.

அக்காலத்தில் டொனமூர் கமிஷன் சிபார்சுகள் இந்நாட்டில் வெளியிடப்பட்டிருந்தன இச் சிபார்சுகளை அப்போதைய பெரும் தலைவர் சேர். பொன். இராமநாதன் ஆட்சேபிப்பதற்றாக லண்டன் பயணமானார். அந்த நேரத்தில் இங்குள்ள சில தமிழ் அரசியல் பிரமுகர்கள் அந்தச் சிபார்சினை ஏற்க முடிவு செய்தார்கள். 1929 ஆம் ஆண்டு கொழும்பில் சில தமிழ்ப் பிரமுகர்கள் இந்தச் சிபார்சுகளை ஏற்கும் பொருட்டுத் தீர்மானம் எடுத்தார்கள் கொழும்பில் கூட்டம் கூட்டினார்கள். அக் கூட்டத்திற்கு வந்திருந்த இளைஞரான ஜி. ஜி. பொன்னம்பலம் அக்கமிஷனின் சிபார்சுகளால் ஏற்பட இருக்கும் தீமைகளை சுட்டிக் காட்டி சிபார்சுகளை ஏற்கக் கூடாது என்ற தீர்மானத்தை முன்மொழிந்தார். தீர்மானம் அதிகப்படியான வாக்குகளால் நிராகரிக்கப்பட்டது.

அன்று தமிழர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஜி. ஜி. பொன்னம்பலம், சேர். பொன்னம்பலம் இராமநாதன் மறைவுக்குப் பின்பு தமிழ் மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்ந்தார், இந்நாடு சிங்கள நாடு என்றும் இந்நாடு சிங்களவர்களுக்கே



சொந்தம் என்றும் சிங்களத் தலைவர்களிடையே ஓர் எண்ணம் வலுப்பெற்ற நிலையில் சிங்கள மகா சபையை திரு. பண்டாரநாயக்கா தோற்றுவித்தார். சிறுபான்மையினரை ஒதுக்கும் திட்டமிட்ட சூழ்ச்சியை உணர்ந்த ஜி. ஜி. பொன்னம்பலம் தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா எனும் தாரக மந்திரத்துக்கமைய தமிழரைப் பாதுகாக்கும் முறையிலும் தமிழரின் குரலாக இருக்கும் பொருட்டும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரசை 1944 இல் நிறுவினார்.

அக்கட்சி அன்று தொட்டு இன்று வரை தமிழரின் பாதுகாவலனாக இருந்து வருகிறது. அவரின் மறைவுக்கு பின்பு அவரின் தனயன் மாமனிதன் குமார் பொன்னம்பலம் கட்சியின் தலைமையை ஏற்றுத்தமிழ் இனத்திற்காக அரும் தொண்டு ஆற்றினார்.

1945ஆம் ஆண்டில் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் ஜி ஜி. பொன்னம்பலம் சோல்பரிக் கமிஷன் முன் தோன்றி சிறுபான்மை மக்களின் நிலமையை விளக்கியதோடு சம பிரதிநிதித்துவ கோட்பாட்டை முன்வைத்தார்.

### சமபலக் கோட்பாடு

சிங்களவருக்கும் ஏனைய சிறுபான்மையினருக்கும் நாடாளுமன்றத்தில் சமபலம் இருக்கவேண்டுமென்பதே இக்கோட்பாடாகும். தமிழர்களுக்கு வரப்போகும் இடர்களை முன்கூட்டியே அறிந்ததனால் அதனை வராமல் தடுப்பதற்காக இக்கோட்பாட்டை முன்வைத்தார்.

சோல்பரிக் குழுவினர் சமபிரதிநிதித்துவக் கோட்பாட்டை ஏற்கா விடினும் ஜி. ஜி. யின் வாதத்தின் காரணத்தினால் 29 ஆம் பிரிவு ஒன்றில் சில பாதுகாப்புகளை சிறுபான்மையினரின் நன்மை கருதி அரசியல் சாசனத்தில் உட்புகுந்த வேண்டுமென சிபாரிசு செய்தனர். ஒவ்வொரு தமிழனும் சம உரிமையுடன் பாதுகாப்பாக இலங்கையின் எந்தப் பாகத்திலும் இருக்கவேண்டும் என்பதே அவரின் விருப்பமாகும்.

### பிரிந்து வாழும் நிலை

அவ்வாறு எபபாகத்திலும் சம உரிமையோடு சமபங்காளிகளாக வாழமுடியாவிடில் தமிழ் மக்கள் பிரிந்து தான் வாழவேண்டும் என்பது அவர் கருத்தாக இருந்தது. தனிச் சிங்களச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட போது அம்மசோதா அமுல்படுத்தப்படுமானால் நாடு பிளவுபடுமென ஆணித்தரமாக அவர் நாடாளுமன்றத்தில் எடுத்துரைத்தார்,

அ. விநாயகமூர்த்தி
[நாடாளுமன்ற உறுப்பினர்]
தலைவர், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்

1933 ஆம் ஆண்டிலேயே ஜி ஜி. பொன்னம்பலம் சட்டசபை அங்கத்தவரான காலம் தொட்டு இலங்கை இந்தியக் காங்கிரஸ் மலைநாட்டுத் தமிழரின் அரசியல் கட்சியாக உருப்பெற்றது. 1943 ஆம் ஆண்டு வரை பொன்னம்பலம் சட்டசபையிலும் அதற்கு வெளியிலும் மலைநாட்டுத் தமிழரின் உரிமைக்காகவும் அவர்களின் பொருளாதார முன்னேற்றத்துக்கும் போராடியும் வாதாடியும் வந்தார் என்பது வரலாறு.

அவர் மலைநாட்டுத் தமிழரின் பாதுகாப்பையும் அந்தஸ்தையும் தமது அயராத உழைப்பாலும் அரிய இயா

[10 ஆம் பக்கம் பார்க்க]

# முன்னைய காலத்தில் ஏழ்மையில் உழன்ற கலைஞர்கள் இன்று சிறப்பாக வாழ்கிறார்கள்

## மிருதங்க அரங்கேற்ற விழாவில் துணைவேந்தர்

வலி. வடக்கு, பெப். 9

முன்னைய காலங்களில் கலைத்துறையோடு சம்பந்தப்பட்டவர்கள் வருமானம் இன்றி ஏழ்மை நிலையில் காணப்பட்டனர். தற்போது அந்த நிலைமையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இன்று கலைஞர்கள் பேரும் புகழுமாகச் சிறப்புடன் வாழ்கிறார்கள்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக விஞ்ஞானபீட கணித முதலாம் ஆண்டு மாணவன் திருச்செகநாதன் வரோதயனின் மிருதங்க அரங்கேற்ற நிகழ்வு அண்மையில் அளவெட்டி ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தான அன்னசுரபி மண்டபத்தில் இடம் பெற்றது.

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி இ. குமாரவடிவேல் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை மேலும் கூறியதாவது,

மாணவர் ஒருவர் ஒரே நேரத்தில் இரண்டு பட்டங்களைப் பெறக்கூடிய வாய்ப்பை நாம் ஏற்படுத்த வேண்டும். ஆனால் இத்தகைய நிலைமையை ஏற்படுத்தும் வாய்ப்பு எமது கைகளில் இல்லை. ஆனால் இந்தியாவைப் பொறுத்த வரையில் மாணவர்களுக்கு இத்தகைய சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது.

பிள்ளைகள் கல்வியுடன் மட்டும்நின்றுவிடாது ஏனைய துறைகளிலும் பாண்டித்தியம் பெற்றவர்களாக இருத்தல் வேண்டும். சங்கீதம், நடனம் போன்ற துறைகளுக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. கூட்டு முயற்சி செயற்பாடுகளுக்கு இவை கூடிய பயனை அளிக்கும்.

யுத்தம் நீங்கிச் சமாதானம் ஏற்படுமானால் யாழ்ப்பாணம் ஒரு சிங்கப்பூராக மாறிவிடும். இன்று மக்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வருகின்றார்கள். வெளிநாடுகளில் வசிப்பவர்களும் கூட இந் நிலைமையிலேயே வாழ்க்கை நடத்துகிறார்கள்.

முன்னைய காலங்களில் கலைத்துறைக்குச் சேவையாற்றுபவர்களின் இடையே வருமானம் இன்றி ஏழ்மை காணப்பட்டது. தற்போது அந்நிலைமையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்று கூறினார்.

தலைமை உரையாற்றிய பேராசிரியர் இ. குமாரவடிவேல் கூறியதாவது:-

அண்மைக்காலமாக பெற்றோர்களின் போக்கில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. பிள்ளைகளின் எதிர்காலம் பெற்றோர்கள் ஆசிரியர்களின் வழிகாட்டலிலே தங்கியுள்ளது. ஒவ்வொரு பெற்றோரும் தமது பிள்ளைகள் படித்துப்பட்டம் பெற்று உயர் பதவி வகிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டு வழிகாட்டுகின்றார்கள் இதனை குறையென்று சொல்ல முடியாது.

அதேசமயம் —

பிள்ளைகள் சமூகத்துக்கு உதவும் பிள்ளைகளாகவும் மனித விழுமியங்களைப் பேணும் குழந்தைகளாகவும் வளர வழி காட்ட வேண்டும்.

மாணவர்கள் இடையே பாடசாலைக் காலத்தில் நல்ல விடயங்களைப் பதிவு செய்யக் கூடியவற்றை ஆசிரியர்கள் கற்பித்தல் வேண்டும். பாட விதானத்தை மட்டும் கற்பிப்பதனால் பிள்ளைகள் மனித விழுமியங்களைப் பேணும் பிள்ளைகளாக மாட்டார்கள்.

எமக்கு முன்னோரால் அளிக்கப்பட்ட ஆன்மீகச் செல்வம், கலைச் செல்வம், கலாசாரச்செல்வம், மனித விழுமியங்கள் யாவும் மதிக்கபபட வேண்டும். பிள்ளைகளுக்கும் புகட்டப்படவேண்டும். இவற்றுடன் சமூகவிஞ்ஞானக் கல்வியும் புகட்டப்பட வேண்டும்.

பல் கலைக் கழகத் திற்கு மாணவர்கள் வெட்டுப் புள்ளியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு வருகின்றார்கள், ஆனால், அவர்கள் ஆன்மீகம், கலை, கலாசாரம், ஆங்கிலம், பொது விடயங்கள் சம்பந்தமான அறிவுகள் எதுவும் இன்றிக் காணப்படுகின்றார்கள் எனவும் குறிப்பிட்டார்.

நல்லை ஆதீன முதல்வர் ஆசியுரையும் பேராசிரியர் அ. சண்முகதாஸ் வாழ்த்துரையும் வழங்கினர்.

விஞ்ஞானபீட கணித விரிவுரையாளர் கலாநிதி க. ஸ்ரீசற்குணராசா, கலாபூஷணம் சு. கணபதிப்பிள்ளை, அருட்கவி. சி. விநாசித்தம்பி புலவர், செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் உட்பட மற்றும் பலரும் அங்கு உரையாற்றினர். (க - 86)

## நாளை

தை 28

சனிக்கிழமை

திதி: துதியை

முற்பகல்09.16 வரை.

நட்சத்திரம்: பூரம்

மாலை 5.46 வரை.

சுபநேரம்: 3.34 — 5.04

ராகுகாலம்: 09.34—11.04

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

எல்லா முக்கிய காரியங்களிலும் முதன்மையானது — மனச்சாட்சியை ஏமாற்றாதிருப்பது.

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

மட்டுவில் வடக்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த கந்தையா கருணாகரன் என்பவருடைய தே.அ.அட்டை (இல.683410756**V**) 01.02.2001 அன்று யாழ்ப்பாணத்திற்கும், அச்சுவேலிக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ்ப்பாணம் லிங்கம் சில்க்கவுஸ் ஸ்தாபனத்தில் ஒப்படைத்து உதவவும். (83892)

கச்சாய் றோட், கொடிகாமம் எனும் முகவரியைச் சேர்ந்த த.சண்முகநாதன் என்பவருடைய தேசிய அ.அ. (இல.351830278**V**) ஆனைப்பந்திக்கும் அச்சுவேலிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் செ. கணேசமூர்த்தி (ஆசிரியர்), பிள்ளையார் கோயிலடி, அச்சுவேலி என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். (83913)

சேர்ச்லேன், கொக்குவில் மேற்கு, கொக்குவிலைச் சேர்ந்த பத்மநாதன் பத்மராஜா என்பவருடைய தேசிய அ.அட்டை (இல.532323177**V**), விசேட அ.அட்டை (இல.0902043085) என்பன கொக்குவிலுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுததவர்கள் தயவு செய்து மேற் குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்து உதவவும். (83925)

### இளம் ஓவியர்கள் தேவை

சிறுவர் சித்திரக் கதைகளுக்குப் படம் வரைவதற்கு திறமையுள்ள ஓவியர்கள் தேவை. இலக்கிய ஆர்வலராகவும் சித்திரத்தில் ஈடுபாடுள்ளவரும் விரும்பத்தக்கது. விளம்பர இல. 1204, மே/பா. உதயன். (83902)

### விற்பனைக்கு

சுப்பர் கப் 50 ஹொண்டா மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 352, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (83912)

### தேவை

சக்கர நாற்காலி **(WHEEL CHAIR)** தேவை. தொடர்பு கொள்ளவும். செ.பாலசுந்தரம், இல.802, திருநெல்வேலி வடக்கு, பலாலிவீதி, திருநெல்வேலி. **T.P- 2732** (83910)

### அபூர்வ ஜோதிடம்

சித்தர் பொக்கிஷம் மூலம் தீராத மொழிவாதம், மனநோய், ஜலதோஷம் குணம்பெறல், காண்டமுறையில் அனைத்து கால பலனையும் அறிதல். நேரம்:- சனி, ஞாயிறு **8.30-5.00 p.m.** ஆடியபாதம் வீதி, சரஸ்வதி மில்லேன், கொக்குவில் கிழக்கு. (83914)

### மணமகள் தேவை

கௌரவ குடும்பத்தைச சேர்ந்த றோமன் கத்தோலிக்க, எவ்வித தீய பழக்கங்களும் அற்ற, சுயதொழில் மூலம் மாதம் **10,000/-** வரை வருவாயையுடைய படித்த 36 வயது உடைய மணமகனுக்குப் பெற்றோர் மணமகளை எதிர்பார்க்கின்றனர். முழுவிவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். விள.இல.1205,மே/பா உதயன். (83922)

### நாய்க்குட்டி விற்பனைக்கு

பூச்சி நீக்கப்பட்ட 40 நாள்கள் நிரம்பிய நல்ல இன அல்ஷேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- மு.ஜயந்தி, சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய். (83926)

### கல்வி

கொம்பியூட்டர் கல்வியும், **A/L** ஆங்கிலப் புத்தகத்தை அடிப்படையாக வைத்து ஆங்கிலக் கல்வியும் சனி, ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும். தொடர்பு: **S.C.**இம்மானுவேல் **B.Sc. (Ceylon)** பொறியியலாளர், **41/1,** கோயில் வீதி, யாழ்ப்பாணம். (83829)

### மணமக்கள் தேவை

ஸ்பொன்சரில் அழைக்கக் கூடிய மணமகன்மாருக்கு அழகான பெண்கள் தேவை. ஜாதகத்துடன் வரவும். ஞாயிறு பழம்பிள்ளையார் கோயில் மடம், சனி ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோயிலடி, நல்லூரிலும் சந்திக்கலாம். பொய்யாமொழி ஜோதிடம். (83740)

## வலி. மேற்குப் பிரதேச செயலர் பிரிவில்

# அரைகுறை வீடுகளை பூர்த்தி செய்ய 25 ஆயிரம் ரூபா நன்கொடை

வலி.மேற்கு,பெப்.9

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் பூர்த்தியடையாமல் அரைகுறையாகக் காணப்படும் வீடுகளைக் கட்டி முடிப்பதற்கு குறிப்பிட்ட குடும்பத்தவர்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகளைப் பிரதேச செயலர் நா. வேதநாயகன் மேற்கொண்டுள்ளார்.

சுழிபுரம், பல்லசுட்டி, அராலி, வட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் போரூட் நிறுவனத்தினரால் மேற்கொள்ளப்பட்டு பூர்த்தியடையாமல் இருக்கும் வீடுகளைத் தெரிவு செய்து விவரங்களைச் சமர்ப்பிக்குமாறு கிராம உத்தியோகத்தர்களை பிரதேச செயலர் பணித்துள்ளார்.

இந்த வீடுகளைக் கட்டி முடிப்பதற்கு 25 ஆயிரம் ரூபாவை நன்கொடையாக வழங்கி வருமானம் குறைந்த குடும்பங்களைக் குடியமர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

# தமிழ் அரசியல் கைதிகளுக்கு தனியாகத் திறந்தவெளிச் சிறை

கொழும்பு,பெப்.9

களுத்துறை மற்றும் பூஸா சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளுக்கெனத் தனியான திறந்தவெளிச் சிறைச்சாலை அமைக்கப்பட்டு அதில் அவர்களைத் தடுத்து வைப்பது தொடர்பாக சிறைச்சாலைத் தலைமையகம் ஆராய்ந்து வருவதாகத் தெரியவருகிறது.

அரசியல் கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்து இட நெருக்கடி ஏற்பட்டிருப்பதை அடுத்தே மேற்படி புதிய திட்டம் குறித்து ஆராயப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

தமிழ் அரசியல் கைதிகளின் நிலைமை குறித்து மனித உரிமை நிறுவனங்கள் பல தொடர்ந்தும் குற்றஞ்சாட்டி வருவதை அடுத்தே இந் நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று கருதப்படுகிறது. (க-20)

# VACANCY

## ST. JOHN'S COLLEGE, JAFFNA

**POST OF VICE PRINCIPAL**

*Graduates with teaching experience may apply to:*

**The Secretary,**
**Governing Body of Educational Institutions,**
**Founded by CMS in Ceylon,**
**Diocesan office,**
**368/A, Bauddhaloka Mawatha,**
**Colombo 7.**

*On or before 28th February 2001*

(c/15219)

## மூக்குக் கண்ணாடி வழங்குதல்

We Serve

10.09.2000 இல் வடமராட்சி லயன்ஸ் கழகத்தால் நெல்லியடி மெ.மி.த. பாடசாலையில் நடத்தப்பட்ட கண் சிகிச்சை முகாமில் கண் பரிசோதனை செய்தவர்களுக்கு கண்ணாடி வழங்கப்படும்.

இடம்:- **நெல்லியடி மெ.மி.த.பாடசாலை - வதிரி.**

காலம்:- 11.02.2001 ஞாயிறு காலை 9.00 மணியளவில்

பிரதம விருந்தினர்:-

**லயன் வண.பிதா P.M.இமானுவேல் அடிகள்.**
(முன்னாள் பங்குத்தந்தை, பருத்தித்துறை)

வறுமை நிலையில் உள்ளவர்கள், இடம்பெயர்ந்தவர்கள் ஆகியோருக்கு இலவசமாகக் கண்ணாடி வழங்கப்படும்.

*தலைவர்,*
*வடமராட்சி லயன்ஸ் கழகம்.*

(83928)

## யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்
## இல்ல மெய்வன்மைப் போட்டி 2001

இன்று (09.02.2001) வெள்ளிக்கிழமை பி.ப. 1.30 மணி

தலைவர்:
அதிபர் திரு.எஸ்.சண்முககுமார் (B.A.Dip. in Edu.)

பிரதம விருந்தினர்:
Dr.திருமதி யாழினி யோகேஸ்வரன் *அவர்கள் கோண்டாவில்*

சிறப்பு விருந்தினர்கள்:
திரு.மு.திருஞானசம்பந்தப்பிள்ளை *அவர்கள்* (ஓய்வு பெற்ற அதிபர்)
திரு.வே.லோகேஸ்வரன் *அவர்கள்* (தொழில்அதிபர்)

கௌரவ விருந்தினர்:
திரு.வை.சின்னத்தம்பி (ஓய்வு பெற்ற அதிபர்)

(83934) *பாடசாலைக் குடும்பம்.*

## குரும்பசிட்டி சன்மார்க்கசபை
## கல்வி மேம்பாட்டு நிதியம்

குரும்பசிட்டி (J/242), குரும்பசிட்டி கிழக்கு (J/243) கிராம அதிகாரி பிரிவுகளை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர்களிடமிருந்து கீழ்வரும் புலமைப்பரிசுகளுக்கான விண்ணப்பங்கள் 20.02.2001 வரை ஏற்றுக்கொள்ளப்படும.

1. **1998,1999** க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்று பல்கலைக்கழக அனுமதி பெற்றோர்/ தகுதியானோர்.
2. **1998/1999, 1999/2000** கல்வியாண்டில் டிப்ளோமா மற்றும் பட்டபின் படிப்புக்குப் பல்கலைக்கழக அனுமதி பெற்றோர்.
3. **1999, 2000** ஆண்டு ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் தகுதி பெற்றோர்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:- திரு.ம.சபாரத்தினம், வங்கியடி, இணுவில் கிழக்கு, இணுவில், சுன்னாகம்.

இது விடயமாகக் குரும்பசிட்டி சன்மார்க்க சபை கல்வி மேம்பாட்டுக் குழுவின் முடிவே இறுதியானதாகும்.

பொன்.பாலகுமார்
பொதுக் காரியதரிசி.

(83933)

"நான் வளர்த்த பிள்ளை"

**பொன்னையா கமலரூபன்** அவர்களின்
(விரிவுரையாளர் தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

## 45ஆம் நாள் நினைவலைகளும் "கமலரூபம்" நூல் வெளியீடும்

இடம: **MATHS CENTER,** நெல்லியடி.

காலம்: 11.02.2001, ஞாயிற்றுக்கிழமை
காலை 9.00 மணி (ப.நே)

* *உருவப்படம் திரை நீக்கம்:*
  கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா *அவர்கள்*
  (தலைவர், தமிழ்த்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
* *நினைவுச்சுடரேற்றுதல்:*
  சகோதரன் திரு.பொ.கமலநாதன்
* "கமலரூபம்" நூல் வெளியீடு
  நூல்வெளியீடும், வெளியீட்டுரையும்:
  பேராசிரியர். இ.சண்முகதாஸ் *அவர்கள்*
  (பீடாதிபதி, உயர்பட்டப்படிப்புகள்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

**அன்னாருடன் தொடர்புடையவர்களும், அன்னாரிடம் கல்வி பயின்றவர்களும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.*

விமலன் ஆசிரியர்
நிர்வாகி,
**MATHS CENTRE.**

*நெல்லியடி.* (83924)

## நெஞ்சம் கனத்த 45 ஆம் நினைவு நாள்

**செல்வி கந்தன் இராஜேஸ்வரி**
(சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்

மலர்வு 1973 - 05 - 09 உதிர்வு 2000 - 12 - 27

ராஜேஸ்!
உன்னைத் தொலைத்தாலும்
உன் நினைவுகளை
நெஞ்சமதில் சுமக்கின்றோம்.

**சமுர்த்தி முகாமையாளர்கள்,**
**சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்.**

*பிரதேச செயலகம், தென்மராட்சி.* (83935)

## பேரானந்தப் பெருவாழ்வில் ஓராண்டு

மண்ணில் 10 - 07 - 1922



விண்ணில் 09 - 02 - 2000

**சிற்றம்பலம் பொன்னம்மா**
(அலுக்கை, அளவெட்டி)

காயாமல், நனையாமல் காத்து வளர்த்த
எமது தெய்வம்
கும்பழாவளைப் பிள்ளையாரினதும்
நாவலடி ஞானவைரவப் பெருமானினதும்
பாதார விந்தங்களில் நிறைந்திடப்
பிரார்த்திக்கின்றோம்.

முதுபெரும் புலவர்,
வை.க.சிற்றம்பலம் குடும்பத்தினர்.

*அளவெட்டி.*
(C/15217)

# பொன்னாலையில் சேதமுற்ற வீடுகளுக்கு ரூ.1லட்சம் இழப்பீடு

வலி.மேற்கு,பெப்.9

பொன்னாலை கிராம உத்தியோகத்தர் பிரிவில் 1500 ரூபாவுக்கு மேற்பட்ட வருமானத்தையுடையவர்கள் தமது வீடுகள் சேதமடைந்திருந்தால் உரிய விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து ஒப்படைக்குமாறு பிரதேச செயலர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார்.

பொன்னாலை கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த ஓய்வூதியம் பெறுவோர் ரூபா 1500க்கு மேற்பட்ட வருமானத்தையுடைய தனியார் நிறுவனங்களில் கடமையாற்றுவோர் தமது வீடுகள் சேதமடைந்திருந்தால் ஒரு லட்சம் ரூபா இழப்பீட்டு நன்கொடையைப் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பங்களைக் கிராம உத்தியோகத்தரிடம் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-175)

## அமரர் பொன்னம்பலத்தின் நினைவு தினம் அனுஷ்டிப்பு

### இன்று குருநகரில் அஞ்சலி நிகழ்வு

யாழ்ப்பாணம்,பெப்.9

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சி ஸ்தாபகர் அமரர் ஜி.ஜி.பொன்னம்பலத்தின் 24 ஆவது நினைவு தினம் இன்று தமிழ் காங்கிரஸ் கட்சியினால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இந்நினைவு தினத்தையொட்டி கொழும்பிலுள்ள இந்து ஆலயங்களில் விஷேட அபிஷேக ஆராதனைகள் நடத்தப்படவுள்ளன.

விஷேட வழிபாடுகளில் தமிழ்க் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி பொதுச் செயலாளர் ந.குமரகுருபரன், துணைச் செயலாளர் மு.தர்மராஜா, துணைத் தலைவர் தில்லைக்கூடத்தல் நடராஜா ஆகியோர் கலந்து கொள்வர்.

திருகோணமலையில் இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் ஆலயங்களிலும் விஷேட வழிபாடுகள் நடைபெறவுள்ளதுடன் யாழ்ப்பாணத்தில் குருநகரிலுள்ள அமரரின் திருவுருவச் சிலையின் முன்பாக நினைவு தின நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (க-5)

## நவீன சந்தையாக மாற்றப்படும்

மானிப்பாய் பொதுச்சந்தை நவீன சந்தையாக மாற்றியமைக்கப்படவுள்ளது.

இதற்கான நிதியை வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா ஒதுக்கியுள்ளார்.

இதேவேளை, மாதகல் பகுதி மக்களின் நன்மைகருதி பல லட்சம் ரூபா செலவில் சந்தை ஒன்று அமைகக்கப்பட்டு வருவதாக பிரதேச சபைத் தலைவர் வெ.அ.ஜோன்சன் தெரிவித்தார். (க-185)

### மறைந்து 24 வருடங்களின் பின்

## ஜீ.ஜீ யை கூட்டணி நினைவு கூருவது குறித்து தமிழ்க்காங்கிரஸ் புளகாங்கிதம்

யாழ்ப்பாணம்,பெப்.9

அகில இலங்கைத் தமிழர் காங்கிரஸ் கட்சியின் ஸ்தாபகர் அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் மறைந்து 24 வருடங்களின் பின் தமிழர் விடுதலைக் கூட்டணி தனது யாழ்.கிளை காரியாலயத்தில் அன்னாரின் உருவப்படத்தினை வைத்து மலரஞ்சலிகள் செலுத்தவுள்ளதாக அறிகிறோம். இதனையிட்டு தமிழ்க் காங்கிரஸ் கட்சி புளகாங்கிதம் அடைகிறது.

இவ்வாறு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் ந.குமரகுருபரன் வெளியிட்டுள்ள பத்திரிகை குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கால் நூற்றாண்டின் பின் அமரர் பொன்னம்பலத்தினுடைய தீர்க்க தரிசனத்தையும், மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் விசுவாசமான, இதய சுத்தியான அரசியல் தியாகத் திறனையும் தமிழர் விடுதலைக் கூட்டணி ஏற்றுக் கொள்ளத் தலைப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

தமிழினத்தின் தனித்துவம் கரடுமுரடற்ற அரசியல் சுபீட்சம் சுயநிர்ணய உரிமை என்பவற்றுக்காக தமது திறமையினால், துணிவினால் இனத்தின் தன்மானத்தை கோடிட்டுக் காட்டிய சட்ட மேதை ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் தீர்க்கதரிசனத்தை இன்று தமிழினமே ஏற்றுக் கொண்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-5)

## கவிதைப் போட்டியில் முதல் பரிசை பெற்ற அரச ஊழியர்

யாழ்ப்பாணம்,பெப்.9

அரச ஊழியர்களின் ஆக்கத் திறனை வளர்க்கும் வகையில் சமய கலாசார அலுவல்கள் அமைச்சு கடந்த வருடம் நாடளாவிய ரீதியில் நடத்திய கவிதைப் போட்டியில் (தமிழ்) நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் நிதி உதவியாளர் தி.கிரிதரன் முதல் பரிசைப் பெற்றுள்ளார்.

இவருக்குரிய பரிசுத் தொகையான ரூபா ஐயாயிரத்துக்கான காசோலையையும், சான்றிதழையும் சமய கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் எல்லியனாராய்ச்சி கடந்த வாரம் அனுப்பி வைத்துள்ளார். (க-7)

## பாடநூல்கள் கப்பலில் வந்தன

யாழ்.மாவட்ட பாடசாலைகளின் மாணவர்களுக்கு வழங்கவென இலவச பாடப் புத்தகங்கள் கப்பலில் வந்து சேர்ந்துள்ளன.

பாடப் புத்தகங்கள் தென்மராட்சி கல்வி வலய அலுவலகத்துக்கு வந்து சேர்ந்ததும் மாணவர்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளதாகவும் - ஏனைய வலயப் பாடசாலைகளில் கல்வி கற்கும் தென்மராட்சி வலயப்பாடசாலை மாணவருக்கு அந்தந்தக் கோட்ட அலுவலகங்கள் ஊடாக புத்தகங்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (க-117)

# முருகப்பெருமானும் முக்கட்பெருமானும் ஒன்றென உணர்த்திய திருப்பெரு வடிவம்!

யாழ்ப்பாண மக்களால் விரும்பி படித்து பயன் சொல்லப்படும் நூல் கச்சியப்ப சிவாச்சாரியார் அருளிய கந்தபுராணமாகும். கந்தபுராணத்தில் இரு இடங்களில் முருகப்பெருமானது திருப்பெருவடிவத்தை கச்சியப்ப சிவாச்சாரியார் மிக அழகாக வருணிக்கிறார். ஓர் இடத்தில் இந்திராதியோர் சூரபதுமனது தாங் கொணா இடையூறுகட்கு உட்பட்டு தளர்வுற்று தன்னம்பிக்கை இழந்திருந்தனர். இந்த நிலையில் இந்திரன் கந்தவேலின் பேருருக்காட்சியை கண்ட பின்னர் முருகனை வழிபட்டமுறையை பார்ப்போம்.

## ஞானக்கதிர்

முருகப் பெருமானை உயர் பீடத்தில் அமரச் செய்து ஆகாய கங்கை நீரால் அபிஷேகம் செய்து, நுண்துகில் அணிந்து, சந்தனம் சாத்தி, பொற்கலன் சூட்டி, மாலை அணிந்து, ஐவகை ஆவியினால் நறும் புகை காட்டி, கற்பூர ஆராத்தி எடுத்து இந்திரன் வழிபட்டான். இவ்வாறு வழிபட்ட இந்திரன் எதிர்காலத்தில் தமக்கு இனிய வாழ்வுண்டு என நம்பி தெளிந்து முருகனை பரம் பொருள் என மதித்து பக்தி செய்த நிலையில் இந்த காட்சி அமைந்தது.

### திருப்பெரு வடிவம்

பிறிதோர் இடத்தில் முருகப்பெருமானுடன் சூரபதுமன் நான்கு நாள்கள் தொடர்ந்து போர் செய்த போது கந்தவேள் தனது விஸ்வரூபத்தை சூரபதுமனுக்குக் காட்டியதை கச்சியப்பர் பல பாக்களில் வருணிக்கிறார். இந்த இனியதோற்றமாவது புவனம், அண்டம், உயிர்கள் முதலிய அனைத்தும் உள்ளடக்கிய தோற்றம். கந்த பெருமானின் அடிமுதல் முடிவரை (பாதாதிகேசம்) ஆகும். இந்த விபரிப்பு கற்போரை மெய்சிலிர்க்க வைக்கும்.

உலகே ஒரு திருமுருகாக அகவடியில் மலைகளும், புறவடியில் கடல்களும், திருவடி விரல்களில் இடியும், நாள்களும், கோள்களும், பரட்டில் வருணன், குபேரன், நிருதி முதலியோர்களும் கணைக்கால்களில் முனிவர்களும், சிந்தாமணிகளும், முழந்தாள்களில் விஞ்சையர், வானவர் முதலியோரும், தொடையில இந்திரனும் அவனது மைந்தனும், தொடைமுதலில் கூற்றுவனும், கடிதடத்தில் அசுரர்களும், பக்கங்களில் தேவர்களும், மூலாதாரத்தில் நாகர்களும் குறியில் அமிர்தமும், உந்தியில் உயிரினங்களும், மார்பில் கலைகளும், முப்புரிநூலில் ஞானமும், உரோமத்தில் அண்டங்களும், அகங்கையில் அகில போகங்களும், துடந்தோள்களில் திருமாலும், விரிஞ்சனும், செங்கை விரல்களில் தேவப் பெண்களும், கழுத்தில் ஒலித்திரளும் அக்கினியும், மணிவாயில் வேதங்களும், பற்களில் எழுத்துக்களும், நாவில் சிவாகமங்களும், இதழில் மனுவின் விஞ்சைகளும், மூக்கில் அணியனும், விழிகளில் சந்திர சூரியரும், செவியில் திசைகளும், திருநுதலில் பிரணவ மந்திரமும், சென்னியில் பரமான்மாவாகிய பரசிவமும் பொருந்தித் தோன்றும் வண்ணம் பலகோடி சூரியப் பிரகாசத்துடன் கந்தவேள் தன் பேருருவைச் சூரபன்மனுக்கு காட்டி அருளினார். முருகப்பெருமானது திருப்பெரு வடிவங்கண்ட சூரபன்மன் வியந்தமையை கச்சியப்பர்

"ஆயிர கோடி காமர்
அழகெலாந் திரண்டொன்றாகி
மேயின எனினுஞ் செவ்வேள்
விமலமாஞ் சரணந் தன்னில்
தூயநல் லெழிலுக் காற்றா
தென்றிடின் இணைய தொல்லோன்
மாயிரு வடிவிற் கெல்லாம்
உவமையார் வழுக்க வல்லார்"

### சூரனுக்கு ஏற்பட்ட ஞானம்


இத் திருப்பெருவடிவத்தை தரிசித்த சூரபதுமன் உணர்ந்து உளந் திருந்தி கந்தப்பெருமானின் முழுமுதற்றன்மையை ஒரு கணம் ஏற்றான் தமக்குப் பெருவரம் நல்கிய சிவபெருமானும், முருகப்பெருமா னும் ஒன்றென உணர்ந்து, பகையாகக் கருதிய கந்தப் பெருமானை பயபகதியுடன் போற்ற ஏற்ற நேர்ந் தமை சிந்திக்கப்பாலது கச்சியப்ப சிவாச்சாரியார் மேலும்

"கோலமா மஞ்சை தன்னிற்
குலவிய குமரன் தன்னைப்
பாலனென் றிருந்தேன் அந்நாட்
பரிசிவை யுணர்ந்தி லேன்யான்
மாலயன் தனக்கும் ஏனை
வானவர் தனக்கும் யார்க்கும்
மூலகா ரணமாய் நின்ற
மூர்த்திஇம் மூர்த்தி அன்றோ"

பொ.சிவப்பிரகாசம்

☆

## தெய்வீக ஸ்தலங்களில்...



மருதனார்மடம் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலய கும்பாபிஷேகம் அண்மையில் தர்மகர்த்தா சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக்குருக்கள் தலைமையில் இடம்பெற்றது.

ஆலயத்தின் கோபுர கலசத்துக்கு கும்பாபிஷேகம் இடம் பெறுவதையும் ஆலயத்தில் புதிதாக பிரதிஷ்டை செய்யப்பட்ட 9அடி உயரமான ஆஞ்சநேயர் விக்கிரகத்துக்கு கர்பக்கிரகத்தில் சிவாச்சாரியார்கள் அபிஷேகம் செய்வதையும் படங்களில் காணலாம். (ம)



காரைநகர் மணிவாசகர் சபையினரால் நடத்தப்பட்ட சைவசமய பாடப்பரீட்சையில் அதி உயர் புள்ளி பெற்ற கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலய மாணவன் வேலுப்பிள்ளை தவராசாவுக்கு நல்லை ஆதீன முதல்வர் தங்கப்பதக்கம் சூட்டுவதை படத்தில் காணலாம். மணிவாசகர் சபையின் தலைவர் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை, இணைச் செயலாளர் து.நாகேந்திரம் ஆகியோர் அருகில் காணப்படுகின்றனர். (ம-73)

# 43 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

புவி வரவு 02 - 08 - 1955



சிவன் உறவு 29 - 12 - 2000

## அமரர் இளையவி செல்வராசா

(சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர் - காங்கேசன்துறை)

*ஈருடற்கு ஓருயிராய் இணைந்திருந்தோம் - பன்னீர் ஈராண்டு*
*எங்களுயிரே, நீங்கள் எங்களை பிரிந்து போயின்று*
*43 நாள்கள் சென்றதையா உயிரில்லா உடலானோம்*
*கொடிய நோய் வந்துங்களை கொடுமை செய் வேளையிலே*
*எத்தனை தான் விலை கொடுத்தும் உங்கள் உயிர் காத்திடவே*
*எங்களால் ஆனதெல்லாம் நாம் செய்தும் வீணாச்சே!*
*கொடுநோயின் பிடியினிலும் வாடாத உங்கள் வதனம்*
*கடும் துன்பம், துயர்களையும் காட்டாத உங்கள் இயல்பு*
*பிறரெவர்க்கும் துன்பமெதும் நினைக்காத உங்கள் உள்ளம்*
*தனக் கில்லா விட்டாலும் தக்கார்க்கு ஈயும் கை*
*கடமையதே கண்ணாக வாழ்ந்திட்ட உங்கள் வாழ்வு*
*திடமான உங்கள் மனமும் சிலைபோல நிலைத்திருக்கும்*
*எம்பெருமான் திருவடியில் எங்கள் உயிரே நீங்கள் இருப்பீர்கள்*
*இங்கிருந் தெங்கள் மனக்கோயிலில் உங்களை இருத்தி நாங்கள்*
*தொழுவோம்...*

இன்று (09.02.2001) வெள்ளிக்கிழமை காலை 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் எங்கள் அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எங்கள் குடும்பவிளக்காகிய இளையவி செல்வராசா அவர்கள் நோயுற்றிருந்தபோது கைகொடுத்து உதவியவர்களுக்கும் அவர் அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு வந்து எமது துயரில் கலந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் தொலைபேசி, அஞ்சல் மூலம் மலர்வளையம் சாத்தியும் துண்டுப்பிரசுரம், பத்திரிகை மூலமும் கண்ணீர் அஞ்சலியைச் செலுத்தியவர்களுக்கும் மற்றும் இரங்கலுரை நிகழ்த்தியவர்களுக்கும் இறுதிச்சடங்கின் போது உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.


*பொன்னாலை வீதி,*
*துர்க்கா மில் அருகில்,*
*மானிப்பாய்.*

(83847)

மனைவி,
பிள்ளைகள்.

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 19 - 01 - 1948



மறைவு 01 - 02 - 1999

## அமரர் வியாகேசு யோகராஜா

(வானம்பாடி)

(ஆசிரியர், யா/யார்க்கரு விநாயகர் வித்தியாலயம்)

திதி:09-02-2001

வீண்ணவர் நாடேகி
ஆண்டுஇரண்டு சென்றதப்பா
கண்மணிபோல் காத்திடுவீர்
கடுமையாய் பேசமாட்டீர்
எண்ணரிய பிறவிகளில் உம்மை
இனிக் காண்பதெப்போ?
கண்ணுறக்கமின்றிக் கலங்குகிறோம்
புண்ணியனே குலவிளக்கே
எம் ஆசை அப்பாவே!

*கிழவிதோட்டம்,*
*கரவெட்டி கிழக்கு,*
*கரவெட்டி.*

(83850)

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி; பிள்ளைகள்.

## திருட்டுப்போன சைக்கிள்கள் மீட்பு

சண்டிலிப்பாய்,பெப்.9

பண்டத்தரிப்புச் சந்திக்கு அருகிலுள்ள வீட்டில் கடந்த வியாழக்கிழமை இரவு திருட்டுப்போன இரு சைக்கிள்களும் பண்டத்தரிப்பு எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு பின்புறம் உள்ள பற்றைக்குள் இருந்து மீட்கப்பட்டுள்ளன.

இளவாலை பொலீஸ் நிலையத்தில் அந்த இரு சைக்கிள்களும் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (க-135)

## சந்தேகநபர்களுக்கு தொடர்ந்தும் விளக்க மறியல்

தென்மராட்சி,பெப்.9

மிருசுவில் புதைகுழிப் படுகொலைகள் தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 14 சந்தேக நபர்களும் கடந்த திங்கட்கிழமை சாகவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

சந்தேக் நபர்களை எதிர்வரும் 19 ஆம் திகதிவரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (க-117)

## நியமனம் பெற்று 6வருடங்களாகியும் நிரந்தரம் இல்லை

வலி.மேற்கு,பெப்.9

யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களில் கடந்த ஆறு வருடங்களுக்கு முன்னர் தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரம் II ஆ பிரிவில் நியமனம் பெற்றவர்கள் இதுவரை நிரந்தரமாக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.மாவட்டத்திலுள்ள 7 பிரதேச செயலகங்களிலும் 1994 ஆம் ஆண்டு ஜுலை முதலாம் திகதி தொடக்கம் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களாக ஏழு பேர் கடமையாற்றி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-175)

## துர்க்காபுரம் மகளிர் இல்ல ஆண்டு விழா

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் 19ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் எதிர்வரும் 18ஆம் திகதி காலை 9 மணிக்கு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறும்.

விழாவில் பிரதம விருந்தினராக பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் (நந்தி) கலந்து கொள்வார். மகளிர் இல்ல மாணவிகளின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (ம-86)

## கவிதை நூல் வெளியீட்டு விழா

நாவற்குழியூர் கவிஞர் இலட்சுமணனின் 'எண்ணத்தில் உதித்த கவிதைகள்' நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை கலாசார மண்டபத்தில் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சி.கதிரவேற்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

வரவேற்புரையை ஆதார வைத்தியசாலை உதவி மருத்துவர் டாக்டர் மா.யோகேஸ்வரதேவரும் வெளியீட்டுரையை எழுத்தாளர் தெணியானும் மதிப்பீட்டுரையை ஆசிரியர் குப்பிளான் ஐ.சண்முகன், ஆசிரியர் ஆ.கந்தையா ஆகியோரும் நிகழ்த்துவர்.

நூலின் முதற் பிரதியை பருத்தித்துறை ஈ.ஆர்ரான்ஸ்போட் உரிமையாளர் இ.அருணாசலம் பெற்றுக் கொள்வார்.

பருத்தித்துறை சாரதா சேவாச்சிரம முதல்வர் சுவாமி சித்ருபானந்தா, பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி உட்பட பலர் கலந்துகொள்வர். (ஐ-117-173)

## பாடசாலைக்கு கணனிகள்

இளவாலை புனித ஹென்றியரசர் (சென்.ஹென்றீஸ்) கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளையும் லண்டன் கிளையும் இணைந்து கல்லூரிக்கு பத்துக் கணனிகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளன.

அண்மையில் இக்கணனிகள் கொழும்பில் இருந்து கப்பல் மூலம் இங்கு எடுத்துவரப்பட்டுள்ளதாக கல்லூரி அதிபர் அருள்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் தெரிவித்தார். (ஐ-135)

# மறுமலர்ச்சி மன்றம்

## பொதுச் சபைக் கூட்டம்

*காலம்:* 11-02-2001 ஞாயிறு காலை 10.00 மணி.
*இடம்:* மன்றச் செயலகம், லோட்டன் வீதி, மானிப்பாய்.
*(அமரர் பொ.செல்வரத்தினம் அவர்களின் இல்லம்)*
*தலைமை:* திரு. க. தர்மராசா (மன்றத் தலைவர்)

அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகம் தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

பெ.கனகசபாபதி
அக்கிராசனர்

து.ரகு
கௌரவ செயலாளர்

விளம்பர அன்பளிப்பு:-
அன்பு ஜுவல்லர்ஸ் ANPU JEWELLERS
பிரதான வீதி, மானிப்பாய்
தரமான நகைகளுக்கு நாடவேண்டிய இடம்.
உரிமையாளர்: திரு.க.பஞ்சலிங்கம். (83857)

# அன்புத் தாயின் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 23 - 04 - 1928



உதிர்வு 10 - 01 - 2001

## திருமதி ஆறுமுகம் செல்லம்மா

பாரதனில் பிறப்பவர் எல்லோரும் இறப்பது நியதி எனினும்
உங்கள் திடீர் மறைவு தாங்க முடியலையே அம்மா!

*உங்கள் ஆத்மா சாந்தியடைய பருத்தித்துறை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வாரைப் பிரார்த்திக்கின்றோம்.*


*சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

தகவல்:
நாதன் (மகன்)
*பருத்தித்துறை*

(C/15156)

நினைவகலாது
பிள்ளைகள்,மருமக்கள்
சகோதரர்கள், மைத்துனர்கள்,
பேரப்பிள்ளைகள்.

# ஈரவிழிகளுடன் நெஞ்சம் நெகிழும் முதலாம் ஆண்டு நினைவலைகள்



## அமரர் சண்முகராசா இந்திரகுருபரன்

(இந்திரன்)

(உரிமையாளர், நியூ வெஸ்கோ கிறீம் ஹவுஸ்)

மலர்வு 18.03.1964

உதிர்வு 23.01.2000

திதி: 09-02-2001

பாசத்தின் தெய்வமே! அழியாத அன்பும்,
அணையாத நினைவினையும் தந்த போதும்
இல்வாழ்வில் என் வாழ்வை இடையினில் முடித்ததேனோ?
எங்களை ஒரு நாழிகைதானும் பிரிந்ததில்லையே!
எம்மையெல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு
மீளாத இடம் செல்ல எப்படித்தான் மனம் வந்தது?

*இணுவில் மேற்கு,*
*இணுவில்.*

(83897)

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பெற்றோர்,
சகோதரர், மாமி, மைத்துனர்.

# மனித உரிமைகளை உதாசீனப்படுத்தித் தொடரும் இலங்கையின் 17 வருட கால உள்நாட்டுப் போர்

**யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் முகாமைத்துவ மாணவர் மன்றத்தினால் கடந்த மாதம் 31 ஆம் திகதி நடத்தப்பட்ட கருத்தரங்கில் 'மனித உரிமைகளும் ஆயுத முரண்பாடுகளும' என்ற பொருளில் அருட் திரு ஏ.ஜ.பேர்னாட் அடிகளார் உரையாற்றினார்.**

**அவரது உரையின் தொகுப்பு இங்கே பிரசுரமாகிறது.**

யாழ்.பல்கலைக்கழகம் மனித உரிமைகள் திணைக்களம் ஒன்றை உருவாக்கி, இதுபற்றிய ஆய்வுகள், கல்வி போன்றவற்றை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

சுயநிர்ணய உரிமைக் கோரிக்கை நியாயமானது என்று சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம் கூறுகின்றது.

குடியுரிமை, அரசியலுரிமை ஆகியன அரசியல் சாசனத்தின் முதலாவது உறுப்புரையாகக் கூறப்படுகின்றன.

இவைபற்றி பல்கலைக்கழகக் கல்வி மட்டத்திலே தர்க்க ரீதியாக ஆய்வு செய்யப்பட்டு ஓர் ஆவணம் தயாரிக்கப்படவேண்டும்.

அந்த ஆவணம் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை நியாயமானது என்று நாம் கூறத்தக்கதாக இருக்க வேண்டும்.

### ஆண்ட இனம்

தன்னைத்தானே ஆண்ட ஒரு தேசிய இனம் இது என்பது வரலாறு, தொல்பொருள் ஆராய்ச்சி ஆகியவற்றின் அடிப்படையில் தத்துவ ரீதியாக முன் வைக்கப்பட வேண்டிய ஒரு விடயம்.

கி.மு.250 ஆம் ஆண்டில்தான் இலங்கைக்கு விஜயன் வந்தாராம். அதன் பின்னர்தான் ஓர் இனம் வந்ததாகச் சொல்கின்றார்கள். ஆனால் நான் வாசித்ததன்படி இங்கு அவர்கள் வந்தபோது அவர்களை வரவேற்ற ஒரு இனமும் இங்கு இருந்தது.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே ஓர் இனம் இங்கு இருந்தது. அவர்களின் வாரிசுகள்தான் நாங்கள். அந்த இனம் திராவிடர் இனம் என்று கூறப்படுகின்றது. இனத்தைப் பொறுத்தவரை அந்த இனம், இந்த இனம் என்றோ பெரிது, சிறிது என்றோ நான் பார்ப்பவன் அல்லன்.

ஆனால் சுயநிர்ணய உரிமை மறுக்கப்படுவதற்கு சொல்லப்படும் காரணம் என்ன என்று சொன்னால், தமிழர்கள் பின்னர்தான் வந்து குடியேறினார்கள் என்பதே. திம்புப் பேச்சிலேயும் இது கூறப்பட்டதாம்.

## புதைகுழிக்குள் போய்விட்ட மனிதாபிமானச் சட்டங்கள்

### பெரிய நாடுகளிடம் ஒரு கேள்வி

உங்களுடைய நிர்ணய உரிமையை நாங்கள் மதிக்க மாட்டோம். ஆனால் மற்ற சகல உரிமைகளும் மதிக்கப்படும் என்று கூறும் சில பெரிய நாடுகள் உள்ளன.

அவைகளை நாங்கள் கேட்க வேண்டும். எரித்திரியா, பங்களாதேஷ் போன்ற நாடுகளுக்கு என்ன நடந்தது. ஏன் அந்த உரிமை அங்கு மதிக்கப்பட்டது. ஏன் எங்களுக்கு மதிக்கப்படுவதில்லை?

மரபுவழித் தாயகம், பாரம்பரியம், வரலாறு, கலாசாரம், இவை எல்லாம் கொண்ட ஓர் இனம் தான், இங்கு வாழும் தமிழ்த் தேசிய இனம் என்பதனை பெரிய நாடுகளுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

மன்னர்களின் காலத்தில் எவ்வாறு நாங்கள் வாழ்ந்தோம், எங்களுடைய நிலம் எங்கிருந்தது. அதன் பின்பு போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், பிரிட்டிஷார் ஆகியோரின் காலங்களில் இருந்த வரலாறு பற்றி தெளிவுபடுத்த வேண்டும்.

### மனித உரிமையின் பொருள்

ஒருவன் மனிதன் என்ற ரீதியில் அவனுக்கு மகத்துவம் உண்டு. அந்த மகத்துவத்தை வெளிப்படுத்தும்-வளர்க்கும் உரிமைகள்தான் மனித உரிமைகள் என்பதன் பொருள்.

இந்த உரிமைகளுக்கு சர்வதேச சட்ட ரீதியான வடிவம் கொடுத்து சில ஒப்பந்தங்கள் உள்ளன. இந்த ஒப்பந்தங்களுக்கு அப்பால் வழக்காறு சட்டங்கள் என்ற ரீதியிலும் சட்டங்கள் உள்ளன.

சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள உரிமைகள் சட்டம் என்ற வகையில் சகல நாடுகளையும் இந்தச் சட்டங்கள் பணிக்கும்.

ஒப்பந்தம் இட்டால் என்ன, ஒப்பந்தம் இடாது விட்டால் என்ன சர்வதேசச் சட்டங்கள் என்று பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சில சட்டங்கள் சகல நாடுகளுக்கும் பொருத்தமாக, ஏற்புடையதாக இருக்கும்.

தனிநபர்களினது - சர்வதேச ரீதியில் உத்தரவாதப்படுத்தப்பட்டதான அவர்தம் உரிமைகள் மீறப்படுவதற்கு எதிராக, உரிமைகளை மேம்படுத்தச் செய்யும் சட்டம் மனித உரிமைகள் சட்டம்.

இவை அமைதி நிலவும் போது பொருத்தமானவை, ஏற்புடையவை.

ஆனால் யுத்தம் நிலவும் போது, ஆயுத முரண்பாடு நிலவும் போது ஏற்புடையதான சட்டம் மனிதாபிமானச் சட்டம். மானிடம் பற்றிய உணர்வுகளினால் உந்தப்படுவதான சர்வதேச சட்டத்தின் அத்தகைய கணிசமான பகுதி என்பதுடன், யுத்தவேளையில் தனிநபரின் பாதுகாப்பை மையப்படுத்தியதுமான சட்டம் மனிதாபிமானச் சட்டம் ஆகும்.

சர்வதேச சட்டத்தில் கணிசமான அளவு மனிதாபிமான ரீதியில் அமைக்கப்பட்ட சட்டங்கள் உள்ளன.

தனி மனிதனை அல்லது குழுக்களை ஆயுத மோதலின் போது பாதுகாப்பது சம்பந்தமான சட்டங்களே சர்வதேச மனிதாபிமான, மனித உரிமைகள் சட்டங்கள் என்று அழைக்கப்படுகின்றன. மனிதாபிமானச் சட்டம் என்பது ஆயுத மோதலின் போது கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய சில விடயங்களை, உரிமைகளைப் பற்றிக் கவனத்தில் கொண்டுள்ளது.

சர்வதேச சட்டத்தில் சர்வதேச மனித உரிமைகள் என்ற தொகுதியை விட, காலத்தால் முந்தியதான ஒரு தொகுதி ஆயுத முரண்பாட்டுக் காலத்தில் பாதிக்கப்பட்டோரை பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளைப் பற்றிய தொகுதியாகும். இதுதான் சர்வதேச மனிதாபிமானச் சட்டம்.

சர்வதேச மனித உரிமைகள் சட்டம் 19 ஆம் நூற்றாண்டில் தான் ஆரம்பிக்கப்பட்டது. 1948 ஆம் ஆண்டு இரண்டாம் உலக மகாயுத்தத்தை அடுத்து ஏற்படுத்தப்பட்டது மனித உரிமைகள் பிரகடனம். அரசியல் குடிமக்கள் சம்பந்தமான உரிமைகள் பொருளாதார, சமூக, கலாசார, பண்பாட்டு உரிமைகள் போன்றவற்றை அடக்கிய ஆவணங்களை சர்வதேச மனித உரிமைகள் சட்டம் என்று கூறப்படுவதை நாம் அறிவோம்.

### முதலில் தோன்றியது

இவற்றுக்கு முன்னதாகவே சர்வதேச மனிதாபிமானச்சட்டம் இருந்து வந்தது. சர்வதேசச் சட்டம் என்ற வகையில் முதலில் தோன்றிய சட்டம் இதுவாகும். பல நாடுகளுக்கு இடையில் செய்யப்பட்ட ஒப்பந்தங்களில் ஆயுத மோதலின் போது வெவ்வேறு அரசுகள், வெவ்வேறு நாடுகள் கடைப்பிடிக்க வேண்டிய சட்டங் களைப்பற்றியதுதான் முதலிலேயே வந்துவிட்டது.

சர்வதேச மனித உரிமைகள் சட்டம் அல்லது சர்வதேசச் சட்டங்கள் என்று பார்க்கும் போது இத்தகைய மோதல்கள் பற்றிய சட்டங்கள் முன்னரேயே தோன்றிவிட்டன.

மனிதத்துவத்துக்கான உணர்வினால் உந்தப்படுவதும், யுத்தகாலத்தின் போது தனிமனிதரைப் பாதுகாத்தலை மையமாகக் கொண்டதும் தான் இந்தச் சர்வதேச மனிதாபிமானச் சட்டம்.

மனிதாபிமானச் சட்டமும் மனித உரிமைகள் சட்டமும் வேறுபட்டவை அல்ல. மனித உரிமைக் கோட்பாடுகளின் ஒரு சிறப்புப் பிரயோகமே இந்த மனிதாபிமானச் சட்டம் என்று நாம் கூறலாம்.



ஆயுத மோதல்களின் போது இராணுவ தாற்பரியங்கள் முதன்மை அடைவது யதார்த்தம். ஆனால் அதற்காக இராணுவ தாற்பரியங்களுக்கு முன்னுரிமை கொடுத்து, மற்ற உரிமைகளைப் பின்தள்ளுவது எவ்வளவு தூரம் நியாயம் என்ற கேள்வியை நாம் எழுப்ப வேண்டும்.

இராணுவ தாற்பரியம் முதன்மை அடைந்தாலும், மனிதாபிமான உணர்வுகள் மழுங்கடிக்கப்படக்கூடாது.

சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களைப் பொறுத்தவரை, 19 ஆம் நூற்றாண்டிலேயே யுத்தக் கைதிகள், காயப்பட்டோர் ஆகியோர் பராமரிப்புத் தொடர்பான விதிகளைப்பற்றி ஒப்பந்தங்களை நாடுகள் செய்தன.

### விதிகளின்படி

1949 ஆம் ஆண்டு 'ஜெனிவா சமவாயங்கள்' ஆக்கப்பட்டன. 1977 ஆம் ஆண்டு மேலதிக இரு தாயேடுகள் உருவாக்கப்பட்டு புதிய விதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் விதிகளின்படி மோதலில் ஈடுபட முடியாதவராய் ஆக்கப்பட்டோர், மோதலில் நேரடியாகப் பங்குபற்றாதோர் ஆகியோரது உள, உடல், கௌரவம் மதிக்கப்பட்டு, எவ்வித தீங்கும் நேராதபடி பாதுகாக்கப்பட்டு, மனிதாபிமான முறையில் நடத்தப்பட வேண்டும்.

சரணடையும் அல்லது போரிட முடியாத நிலையில் உள்ள ஒரு எதிரியை காயப்படுத்தல், கொல்லுதல் இந்தச்சட்டத்தினால் தடுக்கப்படுகிறது.

## தமிழ் இனத்தின் வரலாற்றை ஆவணப்படுத்த வேண்டும்

காயப்பட்டோர் அல்லது நோயாளிகள் மோதலின் எந்தப்பகுதியின் அதிகாரத்தின் கீழ் கொண்டு வரப்பட்டாலும், அவர்களைப் பராமரித்துப பாதுகாக்க வேண்டியது அந்தப் பகுதியினரின் பொறுப்பு.

இதில் ஈடுபட்டிருக்கும் மருத்துவர், நிறுவனங்கள், தளபாடங்கள் ஆகியனவும் அத்தகைய பாதுகாப்புக்கு உரித்துடையவை.

கைப்பற்றப்பட்ட போர்வீரர், பொதுமக்கள் ஆகியோர் உயிர், மாண்பு, ஆள்சார் உரிமைகள் ஆகியவற்றுக்கு உரித்தானவர்கள்.

எனவே கைப்பற்றிய தரப்பு இவற்றைப் பேண வேண்டும். பதில் தாக்குதல், வன்முறை ஆகியவற்றில் இருந்தும் அவர்களைப் பாதுகாக்க வேண்டும்.

இவர்கள் நிவாரணங்கள் பெறவும் உரிமை உடையவர்கள்.

அடிப்படை நீதிமுறை உத்தரவாதங்களின் பயனைப் பெறுவதற்கு ஒவ்வொருவரும் உரிமையுடையவர்கள்.

தாம் புரிந்திராத செயல் ஒன்றுக்கும் எவரும் பொறுப்பாளிகள் ஆக்கப்படக்கூடாது. எவ்வித சித்திரவதைக்கோ, கொடூரத் தண்டனை அல்லது இழிவான நடத்துகைக்கோ எவரும் உட்படுத்தப்படக் கூடாது.

யுத்தம் செய்யும் வழிமுறைகள், வழிகள் ஆகியவற்றை தெரிவு செய்வதற்கு மோதலில் ஈடுபட்டவர்களுக்கு மட்டற்ற தெரிவு உரிமை இல்லை.

தேவையற்ற அழிவுகளை அல்லது அளவுக்கு அதிகமான வேதனையை ஏற்படுத்தக்கூடிய ஆயுதங்கள், வழிமுறைகள் இந்த மனிதாபிமானச் சட்டத்தினால் தடுக்கப்பட்டுள்ளன.

### பாதுகாப்புப் பொறுப்பு

பொதுமக்களையும் உடமைகளையும் பாதுகாக்கும் வண்ணம், மோதலில் ஈடுபட்டுள்ளவர்கள் பொதுமக்களையும், போராளிகளையும் பிரித்து வேறுபடுத்திக் கொள்ள வேண்டும்.

பொதுமக்கள் கூட்டமாகவோ, தனித்தோ போர்த்தாக்குதலில் இலககாகக் கூடாது. அத்தாக்குதல்கள் இராணுவ இலக்குகளுக்கு எதிராக மாத்திரமே நடத்தப்படவேண்டும்.

பெண்கள், பிள்ளைகள் பாலியல் வல்லுறவுகளில் இருந்து பாதுகாக்கப்படல், உணவுப் பொருள்கள், விவசாய பகுதிகள், பயிர்வகைகள், பண்ணைகள் போன்ற பொதுமக்களின வாழ்வுக்குத் தேவையான அடிப்படைப் பொருள்களைப் பாதுகாத்தல்.

ஆக்கிரமிக்கப்பட்ட நிலத்தில் உள்ளவர்கள் நடத்தப்படும் விதம், கலாசாரப்பொருட்களின் பாதுகாப்பு போன்ற விடயங்கள் பற்றியும் விதிகள் உள்ளன.

இவற்றில் சில விதிகள் வெவ்வேறு நாடுகளுக்கு இடையிலான மோதல்களுக்கு மட்டுமே பொருத்தமாயினும், பல ஏற்பாடுகள் உள்நாட்டு மோதல்களுக்கும் பொருந்தும்.

### உள்நாட்டு மோதல்கள்

உள்நாட்டு மோதல்கள் மிக மோசமான நிலையை அடையும் போது, அந்த ஏற்பாடுகள் பொருத்தமானவை. சில வேளைகளில் இந்த மோதல்கள் இரண்டு நாடுகளுக்கு இடையில் நடைபெறும் மோதல்கள் போன்று அமைகின்றன.

அப்போது பாவிக்கப்படும் ஆயுத தளபாடங்களைப் பார்க்கும் பொழுது, ஏதோ இரண்டு பெரிய அரசுகளுக்கு இடையில் நடைபெறும் மோதல்கள் போன்று இருக்கின்றன.

### தலையீடு

ஓர் அரசு, தனது நாட்டில் குடிமக்களின் உரிமைகளை மதிக்கத் தவறும் போது அது சர்வதேசச் சட்டத்தை மீறுகிறது என்றும் சர்வதேச அக்கறைக்குரிய விடயம் என்றும் கருதப்படுகிறது.

அதனால் இன்னொரு நாடு இதனைப்பற்றி கேள்வி எழுப்பும் போது அது மற்ற நாட்டின் உள்விவகாரம் என்றோ, தனிப்பட்ட விடயத்தில் அது தலையிடுகிறது என்றோ சொல்ல முடியாது.

மேலும் சர்வதேசச் சட்டத்தை ஓர் அரசு மீறும் போது இன்னொரு தேசம், அதைப்பற்றிய கேள்வியை எழுப்பலாம். ஓர் அரசு தனது நியாயாதிக்கத்திற்கு உட்பட்ட மக்களை மனிதாபிமானமாக நடத்த வேண்டும் என்று சர்வதேசச் சட்டம் வலியுறுத்துகின்றது.

எல்லா அரசுகளும் இதற்கு பணிய வேண்டும். இல்லாது விட்டால் ஏனைய அரசுகள் விதிக்கும் தண்டனைக்கு உள்ளாக வேண்டி நேரிடும்.

எனவே இதனை உள்விவகாரம் என்று கொக்கரித்துக் கொண்டிருக்க முடியாது.

சர்வதேச மனிதாபிமானச் சட்டமானது கைது செய்யப்பட்டோரை கொல்லுதல் அல்லது சித்திரவதை செய்தல், பணயக் கைதிகளாகப் பிடித்தல், கூட்டு முறையாக தண்டனை விதித்தல் ஆகியவற்றைத் தடுக்கின்றது.

### தனி மனித சுதந்திரம்

தற்போது பல்விதமான உரிமைகள் இந்தச் சர்வதேசச் சட்டத்தினால் பாதுகாக்கப்படுகின்றன.

பேச்சுச் சுதந்திரம், பயணிப்பதற்கான சுதந்திரம், ஒன்று கூடும் சுதந்திரம், கருத்துக்களை வெளிப்படுத்தும் சுதந்திரம், ஒரு தொழிலைத் தேடி அந்த தொழிலைப் பின்பற்றுவதற்கான சுதந்திரம் இப்படியான பல சுதந்திரங்கள் உள்ளன. இவற்றில் எத்தனை இங்கு மதிக்கப்படுகின்றன என்ற கேள்வி எம்முள் எழும்புகின்றது. இங்கு என்னென்ன உரிமைகள் மறுக்கப்படுகின்றன என்பதை எவருக்குமே சொல்லத் தேவையில்லை.

பொங்கு தமிழ் நிகழ்வின் போது ஒன்று கூடும் உரிமை மறுக்கப்பட்டது. எந்தவிதமான பாதகமில்லா பிரகரங்கள் கூடத் தடுக்கப்பட்டன.

இவை மிக அண்மைக் காலத்தில் நாம் அனுபவத்தில் நேரடியாகக் கண்ட உண்மை.

கடந்த மார்கழி மாதம் 10 ஆம் திகதி சர்வதேச மனித உரிமைகள் தினம். அன்று ஒரு பிரார்த்தனை ஊர்வலம் வைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் இறுதி நேரத்தில் அது மறுக்கப்பட்டது.

### அவசரகால நிலை

சில காரணங்களை முன்னிட்டு அவசரகால நிலை ஒரு நாட்டில் நிலவுமாயின் சில உரிமைகள் மட்டுப்படுத்தப்படலாம் அல்லது கட்டுப்படுத்தப்படலாம்; தற்காலிகமாக நிறுத்தப்படலாம் என்ற உறுப்புரையும், சரத்தும் ஆவணங்களில் உள்ளது.

தேசப் பாதுகாப்பு, பொது நன்மைகள் அல்லது ஒரு நோய் பரவும் சந்தர்ப்பத்தில் சில உரிமைகளைக் கட்டுப்படுத்தலாம். இப்படியான சந்தர்ப்பத்தில் சில உரிமைகளை மட்டுப்படுத்தலாம் அல்லது தற்காலிகமாக நிறுத்தப்படலாம் என்ற ஒரு சரத்தும் இதிலே உள்ளது.

ஆகவே அதன்படி தான் நாங்கள் செயற்படுகிறோம் என்று அரசு சொல்லலாம். இதற்கு பதில் என்ன? மிகவும் கவனமாக அந்த வார்த்தைகளை இந்த ஆவணங்களும், ஆவணங்களைத் தயாரித்தோரும் பாவித்துள்ளார்கள். அதை நாங்கள் மறுக்கக்கூடாது.

தொகுப்பு:
~ கேசரி ~

உதாரணமாக தேவை அல்லது இதில் அக்கறை அல்லது உதவியாக இருக்கும் என்பன போன்ற காரணங்களைக் கொண்டு கட்டுப்படுத்தல் அமையக்கூடாது.

இந்த மட்டுப்படுத்தல் அல்லது கட்டுப்படுத்தல் அவசியமானவை, தவிர்க்கமுடியாதவை என்ற காரணத்திற்காகத்தான் அப்படி தடுக்கப்படும் உரிமைகள் தடுக்கப்படலாம், கட்டுப்படுத்தப்படலாம், மட்டுப்படுத்தப்படலாம் - என்று கூறப்பட்டிருக்கின்றது.

அமைதியாக - சமாதானமான முறையிலே - சாத்வீக முறையில் நாங்கள் ஒன்று கூடி சட்ட விரோதமான எதையும் கேட்கவில்லை, எவரையும் புண்படுத்தவில்லை, எவரையும் தாக்கிப் பேசவில்லை, எங்களுடைய உரிமைகளை ஒரே குரலாக வெளிப்படுத்த விரும்புகின்றோம். அதை தடை செய்வது அவசியம் தானா என்று நாம் கேட்கலாம்.

### பயணத்தடை

சிலவேளைகளில் சில இடங்களில் ஆள்கள், தமது இருப்பிடங்களில் இருந்து வேறு இடங்களுக்குப் பயணிப்பது தடை செய்யப்படுகிறது.

ஆயுத மோதலின் போது மக்கள் பாதுகாக்கப்பட வேண்டும், பாதுகாப்புக்கு உரிய வழிகள் ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்று சட்டம் இருக்கிறது.

(8ஆம் பக்கம் பார்க்க)

# நூலக வாரம் அனுஷ்டிப்பு

ஊர்காவற்றுறை புனிதஅந்தோனியார் கல்லூரியில் இம்மாதம் 6ஆம் திகதி முதல் 9ஆம் திகதி வரை நூலக வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

1990 ஆம் ஆண்டு இப்பகுதியில் ஏற்பட்ட இடம் பெயர்வினால் அழிந்தொழிந்து போன பாடசாலை நூலகத்தை மீள அபிவிருத்தி செய்யும் முகமாக ஆரம்பிக்கப்பட்ட இந்த நூலக வாரத்தில் பாடாசலையின் பழைய மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகள் ஆகியோர் நூல்களை அன்பளிப்புச் செய்ய விரும்பின் பாடசாலையோடு தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ம-16)

குடியியல் நடைமுறைச் சட்டக்கோவையின் பிரிவு 55(1) இன் கீழ் நீதிமன்றினால் விடுக்கப்படும்

## அழைப்பு ஆணை

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்

1. கதிரவேற்பிள்ளை நடனசிகாமணி
2. பெண் விமலாவும்

இருவரும் *புலோலி தெற்கு, புலோலி.*

வழக்கு இல. *17707/ஈடு* — எதிர் — *வழக்காளிகள்*

1. முருகப்பர் கணபதிப்பிள்ளை.
2. கைம்பெண் பெரியநாச்சிப்பிள்ளை.

இருவரும், *புலோலி தெற்கு, புலோலி.*

எதிராளிகள்

மேற்குறித்துள்ள 1ஆம், 2ஆம் எதிராளிக்கு

இந் நீதிமன்றில் உமக்கெதிராக மேலே பெயர் குறித்துள்ள வழக்காளிகள் நிவாரணங்களை கோரி வழக்குத் தொடுத்துள்ளாராகையால், உமது மறுமொழி ஏதும் இருப்பின், அதனை இந் நீதிமன்றில் 2001ஆம் ஆண்டு பங்குனி மாதம் 01ஆம் திகதி காலை 9.30 மணியளவில் அல்லது அதற்கு முன்பாக இந் நீதிமன்றில் சமர்ப்பிக்கும்படி இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுவதுடன் குறித்த திகதியன்று அல்லது அதற்கு முன்னர் நீவிர் மறுமொழி சமர்ப்பிக்கத் தவறினால் இவ்வழக்கானது மறு சாட்சிக்காரர் இன்றி ஒரு முகமாக விளங்கித் தீர்மானிக்கப்படுமென்றும் உமக்கு இத்தால் மேலும் அறிவிக்கப்படுகிறது.

பதிவுபெற்ற சட்டத்தரணிமூலம் நீவிர் நீதிமன்றில் தோற்றாவிடின் உமக்கு சட்டமுறையான சகல அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படுவதற்கான முகவரியைக் கூறும் விவரக் குறிப்பொன்றை இந் நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றின் ஆணைப்படி
**ம.செல்வரத்தினம்,**
பதிவாளர், பருத்தித்துறை மாவட்ட நீதிமன்று.

*குறிப்பு:-* விளக்கத் திகதியை நியமிப்பதற்காக பகிரங்க நீதிமன்றில் இவ்வழக்கு கூப்பிடப்படும் திகதி பற்றி அறிவித்தலை நீர்பெறவிரும்பினால் உமது பதிவுசெய்யப்பட்ட முகவரியை இந்நீதிமன்றின் பதிவாளரிடம் கொடுக்கும்படியும், பதிவு அஞ்சல் மூலம் உமக்கு அதனை அறிவிப்பதற்காக ஏற்படும் அஞ்சல் செலவுக்கான முத்திரைகளையும் கொடுக்குமாறும் இத்தால் குடி.ந.ச.கோ.யின் 80ஆம் பிரிவின் கீழ் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

ம.செல்வரத்தினம்,
பதிவாளர்,
மாவட்டமன்று, பருத்தித்துறை.

திகதி: 02.02.2001
வரைவு: திருமதி வி.ஜி.உருத்திரேஸ்வரன்
வழக்காளியின்/களின் சட்டத்தரணி. (83711)

## 45 ஆம் நாள் நினைவு அஞ்சலிகள்

கைதடி மத்தி, கைதடியைச் சேர்ந்தவரும் கைதடி மத்தி கிராம அலுவலர் பிரிவின் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலருமான

### செல்வி இராஜேஸ்வரி கந்தன்

அவர்கள் கடந்த 27-12-2000 அன்று சிவபதமடைந்ததையிட்டு அன்னாருக்கு எங்கள் கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதுடன், பிரிவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எங்கள் அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*பிரதேச செயலரும், அனைத்து ஊழியர்களும்.*
*ஊழியர் நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம்.*
தென்மராட்சி, சாவகச்சேரி.

(C/15207)

## கண்ணீர் அஞ்சலி

அமரர்

### S.K. பஞ்சலிங்கம் (பஞ்சாட்சரம்)

கடந்த 16 வருடங்களாக எமது மன்றத் தலைவராக இருந்து எமது ஆலய வளர்ச்சிக்கு வழிசமைத்த கந்தையா பஞ்சலிங்கம் (பஞ்சாட்சரம்) அவர்கள். 07.02.2001 இல் அமரரானார்.

அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா அமைதி பெறச் செம்பிதோட்ட வைரவப் பெருமானை இறைஞ்சுகின்றோம்.

செம்பிதோட்ட ஞானவைரவர்
ஆலய பஜனை மன்றம்.
அராலி தெற்கு.

(83921)

## இந்து கலாசார திணைக்களத்துக்கு புதியகட்டடம்

கொழும்பு,பெப்.9

இந்து கலாசாரத் திணைக்களத்தின் புதிய கட்டடம் நேற்று முன்தினம் வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கு இந்து கலாசார தமிழ் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் பம்பலப்பிட்டியில் திறந்து வைக்கப்பட்டது. (ம-10)

## மாசியப்பிட்டியில் சனசமூக நிலைய கட்டடம் திறப்பு

மானிப்பாய்,பெப்.9

மாசியப்பிட்டி வள்ளுவர் சனசமூக நிலையத்துக்கான 2000 ஆம் ஆண்டு நிதியிலிருந்து ஒதுக்கப்பட்ட 1லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்ட புதிய கட்டடம் நேற்று முன்தினம் காலை 9 மணிக்குத் திறந்து வைக்கப்பட்டது.

மானிப்பாய்ப் பிரதேச சபைத் தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் புதிய கட்டடத்தைத் திறந்து வைத்தார். (ஒ)

## பட்ஜெட் மார்ச் 8 இல் தாக்கலாகும்

கொழும்பு,பெப்.9

எதிர்வரும் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட அறிக்கை எதிர்வரும் மார்ச் 8ஆம் திகதி நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படவுள்ளது. அதைத தொடர்ந்து வரவு செலவுத் திட்ட அறிக்கை தொடர்பான விவாதம் 11 ஆம் திகதி வரை இடம்பெறும்.

தற்போது"மக்கள் சக்தி" பாதயாத்திரையில ஈடுபட்டிருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு பிரதமர் ரத்தின சிறி விக்கிரமநாயக்க நேற்று முன்தினம் இது தொடர்பாக அறிவித்திருந்தார் என்றும் அதனை ஏற்றுக்கொண்டுள்ள ரணில் தனது விருப்பத்தைத் தெரிவித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-20)

## குடத்தனையில் பலருக்கு மலேரியா

தென்மராட்சி,பெப்.9

வடமராட்சி கிழக்கு குடத்தனைப் பகுதியில் மலேரியாக் காய்ச்சலின் தாக்கம் காணப்படுவதாக சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர்.

இப் பகுதியிலிருந்து காய்ச்சலால் பாதிக்கப்பட்ட பெருமளவு மக்கள தினமும் மந்திகை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (க-117)

## தொற்றுநோய் விழிப்புணர்வுப் படக்காட்சி

ஊர்காவற்றுறை,பெப்.09

ஊர்காவற்றுறை பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவிலுள்ள பாடசாலை மாணவர்களுக்குத் தொற்றுநோய் பரவாது தடுக்கும் வழிவகைகள் பற்றிய வீடியோப் படக்காட்சிகள் காணபிக்கப்பட்டு வருகின்றன.

பொதுசுகாதாரப் பரிசோதகரினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த வீடியோப் படக்காட்சிகள் மூலம் தொழுநோய், டெங்குக்காய்ச்சல் போன்ற நோய்கள் பரவாது தடுக்கும் முறைகள் பற்றி சுகாதாரப் பகுதியினரால் பாடசாலை மாணவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டு வருகிறது.

மாதாந்தம் இரண்டு பாடசாலைகள் என்ற அடிப்படையில் காண்பிக்கப்பட்டு வரும் இந்த வீடியோப் படக்காட்சிகள் கடந்த மாதம் தம்பாட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையிலும், மெலிஞ்சிமுனை றோ.க.த.க. பாடசாலையிலும் காண்பிக்கப்பட்டதாகவும் -

இந்த மாதத்துக்கான படக்காட்சிகள் கடந்த செவ்வாய்க்கிழமை புனித மரியாள் பாடசாலையிலும், நாரந்தனை றோ.க.த.க. பாடசாலையிலும் காண்பிக்கப்பட்டதாகவும் - ஊர்காவற்றுறை பொது சுகாதாரப் பரிசோதகர் ரா.இந்திரஜித் தெரிவித்தார். (ம-16)

## விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

யாழ்ப்பாணம்,பெப்.9

கரவெட்டி,தேவரையாளி இந்துக் கல்லூரியின் முறைசாராக் கல்விப் பிரிவினால் ஆரம்பிக்கப்படவுள்ள பயிற்சி நெறிகளில் இணைந்து கொள்ள விரும்புவோர் பாடசாலையில் அதற்குரிய விண்ணப்பப் படிவங்களைப் பெற்று இம்மாதம் 23ஆம் திகதிக்கு முன்பு ஒப்படைக்குமாறு அதிபர் தெரிவித்துள்ளார். (ம-10)

# விவசாய ஆராய்ச்சி நிறுவனம் ஆரம்பிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.9

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் விவசாயத்துறையை மேம்படுத்துவதற்காக "விவசாய ஆராய்ச்சி அபிவிருத்திக்கான நிறுவனம்" ஒன்றை ஆரம்பிப்பதற்கான முதல் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக விவசாய பீட பீடாதிபதி சு.இராஜதுரை தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

தொழில்சார் அறிஞர்களையும், கிழக்குப் பல்கலைக்கழகம் மற்றும் பேராதனை பல்கலைக்கழகங்களில் விவசாயத்துடன் தொடர்புடைய பேராசிரியர்கள் உட்பட விவசாயத்துடன் தொடர்புடைய நிறுவனங்களின் அதிகாரிகளையும் உள்வாங்கி அவர்களது ஆலோசனையுடன் இந் நிறுவனம் உருவாக்கப்படும்.

இந்த நிறுவனத்தில் விவசாயம் தொடர்பான ஆராய்ச்சிகளும், புதிய தொழில் நுட்ப ஆராய்ச்சிகளும் மேற்கொண்டு விவசாயத்துறையை நவீன உலகின் போக்கிற்கேற்ப வளர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம்.

இதற்கு முழுமையாகத் தமிழ் அறிஞர்களின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நடை பெறும் யுத்தம் ஓய்ந்து ஒரு சமாதான சூழ்நிலை ஏற்பட்டால் விவசாயத் துறையை மேன்மேலும் வளர்ப்பதற்கு உதவியாக இருக்கும்.

மேற்படி திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான நிதி உதவியை வெளிநாட்டு நிறுவனங்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (க-6-5-ரி)

## சென்ஜோன்ஸ் வி.கவுக்கு கரபந்தாட்டத்தில் முதல் இடம்

யாழ்ப்பாணம்,பெப்.9

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடைபெற்ற கரபந்தாட்டப் போட்டி யில் ஆண்கள் பிரிவிலும், பெண்கள் பிரிவிலும் சென். ஜோன்ஸ் விளையாட்டுக் கழகம் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

ஆண்கள் பிரிவில் இரண்டாம் இடத்தை சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகமும், பெண்கள் பிரிவில் இரண்டாம் இடத்தை பல்துறை விளையாட்டுக்கழகமும் பெற்றுள்ளன.

துடுப்பாட்டப் போட்டியிலும் சென்.ஜோன்ஸ் விளையாட்டுக் கழகம் முதலாவது இடத்தைப் பெற்றுள்ளது. இரண்டாம் இடத்தை உதயசூரியன் வியையாட்டுக்கழகம பெற்றுள்ளது. (ம-7)

# மனித உரிமை...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

***வெளியேறத் தடை***

சென்ற ஆண்டு மாசி, பங்குனி, சித்திரை போன்ற மாதங்களில் மோதல் நடந்த இடங்களில் சிக்கிய மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்வதற்கு முயற்சித்த போது அனுமதி வழங்கப்படவில்லை.

அவர்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்வதற்கு அனுமதி பெறுவதற்காக எத்தனையோ முயற்சிகள் எடுக்கப்பட வேண்டியிருந்தது.

அந்த முயற்சிகளை எடுத்த போது சிலர் சில அசௌகரியங்களுக்கு உட்படுத்தப்பட்டனர். இவ்வாறு அவர்கள் தடுத்து வைக்கப்பட வேண்டியது அவசியம் தானா? என்ற கேள்வியை நாங்கள் எழுப்ப வேண்டும்.

அவர்களைப் பாதுகாக்க வேண்டும். உயிர், உடல் யாவும் பாதுகாக்கப்பட வேண்டும் என்றால் அந்தப் பாதுகாப்புக்குத் தேவையான வழிகளை சம்பந்தப்பட்ட தரப்பு கையாள வேண்டும் என்று சொன்னால், ஏன் இவை மறுக்கப்படுகின்றன? என்ற கேள்வியை நாங்கள் எழுப்பலாம்.

அவசர கால நிலை இந்த நாட்டில் உள்ளது என்ற காரணத்துக்காக, சில உரிமைகள் மட்டுப்படுத்தப்படலாம், கட்டுப்படுத்தப்படலாம் என்று சொல்லும் போது அவை அவசியமானவை தானா? என்ற கேள்வியை நாம் எழுப்ப வேண்டும்- எழுப்ப வேண்டிய உரிமை எமக்கு உண்டு.

மட்டுப்படுத்தும், கட்டுப்படுத்தும் தரப்பினரும் இந்தக் கேள்வியை ஏற்கத்தான் வேண்டும். தன்னை நியாயப்படுத்தவில்லை என்று சொன்னால் அந்த மட்டுப்படுத்தல், கட்டுப்படுத்தல் ஏற்படுத்தப்பட முடியாது.

இலங்கை அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகள் மீதான கட்டுப்பாடுகள் அவை அவசியமானவை என்ற தேவைப்பாட்டைக் கொண்டிருக்கவில்லை.

1991ஆம் ஆண்டில் மிகவும் விவாதிக்கப்பட்டதான 17 ஆவது திருத்த நகல திட்டத்திலேனும் இந்தத் தவறு சரி செய்யப்படவில்லை.

இதனை ஐ.நா.வின் மனித உரிமைகள் குழுவானது, 1991 ஆம் ஆண்டு ஏப்ரலில் நியூயோர்க்கில் பகிரங்க அமர்வில் ஆராய்ந்த பொழுது சுட்டிக் காட்டியுள்ளது.

இலங்கை அரசியல் அமைப்புக்கான 17ஆவது திருத்தத்தைக் கவனிப்பில் எடுக்கையில் கட்டுறுத்தும் மட்டுப்பாடுகளானவை அக்கறைகள் கருதி அல்லாமல், அவசியம் என்ற காரணத்தினால் மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளன.

தேசியப் பொருளாதாரத்தின் நலன் கருதி அரசியலமைப்பில் இருப்பது முறையான காரணங்கள் அல்ல என்று பிரிட்டிஷ் மனித உரிமைகள் நிபுணர் ஒருவர் இந்த அமர்வின் போது சுட்டிக்காட்டினார்.

***மோசமான சட்டங்கள்***

அவசரகால நிலை என்று காரணம் கூறி, பயங்கரவாத தடைச் சட்டம், அவசரகாலச் சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன.

சென்ற வருடம் மே மாதம் கொண்டு வரப்பட்ட சில அவசரகாலச் சட்டங்கள் மிக மோசமான சட்டங்கள்.

இவற்றைக் கண்டித்து சர்வதேச மன்னிப்புச்சபை கடந்த ஆண்டு ஜுலை மாதம் ஓர் அறிக்கை விடுத்துள்ளது.

இதன்படி ஒருவர் கைது செய்யப்பட்டு, அவரை அடித்துக் கொலை செய்துவிட்டு உடலை அழித்து விடலாம். இதற்கான தகுந்த காரணம் எதுவும் கூறத் தேவை யில்லை.

கொலைக்குக் காரணம் கூறாது விட்டால் ஒரு குடிமகனின் பாதுகாப்புக்கு என்ன உத்தரவாதம் உண்டு?

இத்தகைய மிகவும் பயங்கரமான ஒரு சட்டம் விதிக்கப்பட்டது. அதை விதிப்பதற்கு மனமும் வந்தது.

இந்தச் சட்டம் மிக மோசமானதாக இருந்தமையால்தான் இதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டு அது மூன்று நான்கு தினங்களுக்குள் அகற்றப்பட்டது.

***அழிவுகள்***

பொது மக்களுடைய உடமைகள், அவர்களுடைய நிலம், அவர்களுடைய வாழ்வுக்குத் தேவையான வழிகள், காணி, பூமிகள் இவை யாவும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது சர்வதேசச் சட்டம்.

இங்கு இவை எவ்வளவு தூரம் பாதுகாக்கப்படுகின்றன. எத்தனை தென்னம் தோட்டங்கள் அழிக்கப்பட்டுள்ளன. பனை மரங்கள் தறிக்கப்பட்டுள்ளன. மிகவும் செழிப்பான நிலத்தைக் கொண்ட சில பகுதிகள் தற்பொழுது காடு மண்டிக் கிடக்கின்றன. மக்கள் போகமுடியாத அளவுக்கு சுவீகரிக்கப்பட்டுள்ளன.

வசாவிளான், பலாலி போன்ற பகுதிகள் இவ்வாறான நிலையிலே உள்ளன.

ஆயுத மோதலின் போது பொது மக்களின் பொருள்கள், உடமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். ஆனால் எத்தனை வீடுகள் அழிக்கப்பட்டுள்ளன. கலாசார நிலையங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். ஆனால் ஆலயங்கள், பாடசாலைகள், வாசிகசாலைகள் என எத்தனை கட்டடங்கள் அழிக்கப்பட்டுள்ளன.

தேவையற்ற ஆயுதங்களை பாவிக்கக் கூடாது என்று வெளிநாடுகளில் கூட தடை விதிக்கப்பட்டிருக்கிற போது இங்கு பல்குழல் எறிகணை, மிக் 24, மிக் 27 விமானங்கள் உட்பட கனரக ஆயுத தளபாடங்கள் தேவைதானா? நியாயமானதா? இந்தச் சட்டம் அதனை அனுமதிக்கின்றதா? என்று நாங்கள் கேட்கலாம். கேட்க வேண்டும்.

*

# பத்திரிகைத் துறையினருக்கு உயர்சாதனை விருதுகள் - 2000

கொழும்பு,பெப்.9

இலங்கைப் பத்திரிகை ஆசிரியர் சங்கம் வழமைபோல, கடந்த ஆண்டில் (2000) பத்திரிகை மற்றும் செய்தித் துறையில் தொழில் சார்ந்த திறமையை வெளிப்படுத்தியவர்களுக்கு விருதுகளை வழங்கி கௌரவிக்க உள்ளது.

இம்முறை விருதுகளின் எண்ணிக்கை பன்னிரண்டில் இருந்து பதினைந்தாக அதிகரித்துள்ளது.

போட்டியில் மும்மொழிகளிலும் பிரசுரமாகும் பத்திரிகைகளில் பணியாற்றுபவர்களும் சுதந்திர எழுத்தாளர்களும் பங்கு பற்றலாம்.

வருடாந்த விருதுத் திட்டத்தின் பிரதான குறிக்கோள் உயர் தொழில் திறமைக்கு மதிப்பளிப்பதும் ஒரு குறிப்பிட்ட வருடத்தில் உயர்சாதனை படைத்தோருக்கு விருது வழங்குவதுமாகும்.

விருதுக்குத் தகுதியானோர் சங்கத்தின் சார்பில் ஊடகத்துறையைச் சேர்ந்தோரான சுயாதீன நடுவர் குழாம் ஒன்றினால் தெரிவுசெய்யப்படுவர்.

இவ் வருடத்தில் இடம்பெறும் ஒரு விழாவில் பெருமை சேர்க்கும் பின்வரும் விருதுகள் வழங்கப்படும்.

1.வருடத்தின் சிறந்த பத்திரிகையாளருக்கான

**- மேர்வின் டி சில்வா விருது.**

2.நோக்கர்கள் மற்றும் பொதுமக்களின் மெச்சுதல் பெற்ற பத்திரிகையாளருக்கான

**- டி.ஆர்.விஜேயவர்த்தனா விருது.**

3.இலங்கையில் பத்திரிகைச் சுதந்திரத்தை பாதுகாத்தமைக்கான

**- சேபால குணசேன விருது.**

4.ஆண்டின் சிறந்த ஆய்வுக் கட்டுரையாளருக்கான

**-உபாலி விஜயவர்த்தனா விருது.**

5.வருடத்தின் சிறந்த முந்து செய்திக்கான

**- டி.பி.தனபால விருது.**

6.வருடத்தின் சிறந்த பத்தி எழுத்தாளருக்கான

**- பீ.ஏ.சிறிவர்தன விருது.**

7.விஷேட சூழ்நிலைகளின் கீழ் பத்திரிகைச் செய்தியை வழங்கியமைக்கான

**- பேராசிரியர் கே.கைலாசபதி விருது.**

8.வருடத்தின் மிகச் சிறந்த வெளிநாட்டுச் செய்தி அறிக்கைக்கான விருது.

9.வருடத்தின் மிகச் சிறந்த விளையாட்டுத்துறை பத்திரிகையாளர் விருது.

10.வருடத்தின் மிகச் சிறந்த கேலிச் சித்திரக் கலைஞர் விருது.

11.வருடத்தின் மிகச் சிறந்த படப்பிடிப்பாளர் விருது.

12.வருடத்தின் அதியுன்னத வடிவமைப்புக் கொண்ட செய்திப் பத்திரிகை விருது.

13.வருடத்தின் மிகச் சிறந்த இளம் நிருபர் விருது.

14.மிகச் சிறந்த பத்திரிகையாளர் விருது (3 வகைப்பிரிவினர்) சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில ஊடகங்கள்.

15.நீதிபதிகள் தகுதியானதென்று தீர்மானிக்கும் ஏதாவது பிரத்தியேக விருதுகளும், கௌரவிப்புகளும்.

விண்ணப்பங்கள் பின்வரும் முகவரிக்கு தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும் அல்லது கையளிக்கப்பட வேண்டும்.

திரு அமல் ஜயசிங்க, குழுத் தலைவர், நடுவர் குழாம், உயர் சாதனை விருதுகள்- 2000

இல.100 பார்ன்ஸ் பிளேஸ், கொழும்பு - 07.

விண்ணப்பங்கள் 2000 ஜனவரி 01 முதல் டிசம்பர் 31 வரையிலான காலப்பகுதியைத் தழுவி அமைதல் வேண்டும்.

விண்ணப்பங்களை பத்திரிகை ஊடகத்தைச் சேர்ந்த எந்தப் பத்திரிகையாளரோ அவரது செய்திப்பத்திரிகை ஆசிரியரோ/சங்கத்தின் எவராவது அங்கத்தவரோ ஆக்கத்தின் மூலப் பிரதிகளுடன் அல்லது புகைப்பட பிரதிகளுடன் அனுப்பி வைக்கலாம்.

விண்ணப்ப முடிவு திகதி 2001 பெப்ரவரி 28ஆம் திகதி ஆகும்.(அ)



யாழ்.பல்கலைக்கழக உயர்கல்வி பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் அ.சண்முகதாஸின் மணிவிழா கடந்த 4 ஆம் திகதி திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயத்தில் நடைபெற்றது.

விழாவில் கலந்து கொண்ட தென்னிந்திய திருச்சபைப் பேராயர் எஸ்.ஜெபநேசன் உரையாற்றுவதை படத்தில் காணலாம். அருட்கவி.சி.விநாசித்தம்பிப் புலவர், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் ஆகியோரும் உடன் காணப்படுகின்றனர்.

விழா நாயருக்கு 'செந்தழிழ்த் திலகம்' என்னும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. விருதினை, பேராசிரியர் சண்முகதாஸ் மணிவிழா அமைப்பின் தலைவர் தி.கமலநாதனும் செயலாளர் மதுரகவி. காரை.எம்.பி அருளானந்தனும் வழங்கி கௌரவிப்பதை மற்றைய படத்தில் காணலாம். (ம)

# தேர்தல்களில் ஒவ்வொரு கட்சிக்கும் இனி மாவட்ட ரீதியில் 12 வீத வாக்குகள் தேவை

கொழும்பு,பெப்.9

தேர்தல்களில் போட்டியிடும் ஒவ்வொரு கட்சியும் மாவட்டரீதியில் பெறவேண்டிய ஆகக் குறைந்தபட்ச வாக்கு வீதத்தை 5 வீதத்தில் இருந்து 12 வீதமாக உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது.

நாடாளுமன்ற, உள்ளூராட்சித் தேர்தல்களில் சிறு கட்சிகளும் குறிப்பிடத்தக்களவு ஆசனங்களைப் பெற்று வருவதால் பிரதான இரு கட்சிகளும் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வருவதை அடுத்தே மேற்படி முடிவு எடுக்கப்பட்டதாக தெரியவருகிறது.

குறிப்பாக ஜே.வி.பி. உள்ளூராட்சி மன்றங்களில் மட்டுமன்றி நாடாளுமன்றத்திலும் 10 ஆசனங்களைப் பெற்று பிரதான இரு கட்சிகளுக்கும் பெரும் அச்சுறுத்தலை கொடுத்து வருவதை நோக்காகக் கொண்டு இவ்விடயம் தொடர்பாக ஆராயப்படுவதாகவும் தெரவிக்கப்படுகிறது.

இது குறித்து பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க கடந்தவாரம் எதிர்க் கட்சித் தலைவரைச் சந்தித்து பேசியுள்ளதாகவும் இம் முடிவுக்கு ரணில ஆதரவு தெரிவித்ததாகவும் தெரிய வந்தது. (க-20)

## கற்கள் குவித்தும் வீதிப்புனரமைப்பு வேலைகள் தாமதம்

குருநகர்,பெப்.9

நாவலர் வீதியில், கோயில் வீதியில் இருந்து கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் வரையான வீதி குண்டும் குழியுமாகக் காணப்படுகிறது.

இதனால் இவ்வீதியூடாக பெரும் சிரமத்துடன் போக்குவரத்து செய்ய வேண்டியுள்ளதாக பொதுமக்கள் முறையிடுகின்றனர்.

வீதியைச் செப்பனிட கற்கள குவிக்கப்பட்டுள்ள போதிலும் இது வரை அதற்கான வேலைகள ஆரம்பிக்கப்படாமல் இருப்பது குறித்து அவர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். (க-51)

# இலவச கண்பரிசோதனை முகாம்

யாழ்ப்பாணம்,பெப்.9

உரும்பிராய் லயன்ஸ் கழகம் ஏற்பாடு செய்துள்ள இலவச கண் பரிசோதனை முகாம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை ஈவினை கற்பகப் பிள்ளையார் சன சமூக நிலையத்தில் நடைபெற உள்ளது.

அதே தினத்தில் இலவச மருத்துவ முகாம் ஒன்றை வயாவிளான் தெற்கு சனசமூக நிலையத்தில் நடத்துவதற்கும் உரும்பிராய் லயன்ஸ் கழகம் ஏற்பாடு செய்துள்ளது.

இந்த முகாமில் கண், நெஞ்சு நோய், இரத்தஅழுத்தம், நீரிழிவு, பொது மருத்துவம், ஆகியவற்றுக்கான பரிசோதனைகள் இடம்பெறும்.

இதேவேளை -

ஏற்கனவே லயன்ஸ் கழகத்தால் நடத்தப்பட்ட கண் பரிசோதனையில் தெரிவு செய்யப்பட்ட 46 பேருக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகளை வழங்கும் நிகழ்வும் அன்றைய தினம் புன்னாலைக் கட்டுவன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் இடம்பெறும். (ம)

## வாசகர் திருமுகம்

### மின்வெட்டு நேரத்தை மாற்றி மக்களுக்கு உதவ முடியாதா?

யாழ்ப்பாணப் பகுதியில் மின்சார சபையினால் 24 மணி நேரமும் மின்சாரம் வழங்கப்படுவதாக பொதுவாகக் கூறப்படுகின்றது. அரசாங்கமும் வடபகுதியில் மின்சாரத்தை 24 மணி நேரமும் விநியோகிப்பதாகக் கூறிக்கொள்கிறது. உண்மையில் அப்படி வழங்கப்படுகின்றதா?

மின்சாரம் மக்களுக்கு கட்டாயம் தேவைப்படுகின்ற நேரத்தில் வெட்டி நிற்பாட்டப்படுகின்றது. ஆம், ஒன்று விட்டு ஒரு நாள் மாலை 5.45 மணி முதல் 9.45 மணிவரை மின்வெட்டு நடைபெற்று வருகிறது. பின்னர் காலையில் 5 மணி முதல் 8 மணி வரை மீண்டும் மின்வெட்டு.

இந்த நேரங்களில் தான் மக்களுக்கு மின்சாரம் அவசியமாகத் தேவைப்படுகின்றது. இரவில் 10 மணிக்குப் பின்னர் அவசியமில்லை. அதேபோன்று காலையிலும் 8 மணிக்குத் தந்து பிரயோசனமில்லை.

மொத்தத்தில் ஒரு நாளுக்கு 7 மணி நேர மின்சாரம் வெட்டப்படுகின்றது. எனவே 17 மணி நேரம் மட்டும் அதுவும் பல தடவை நின்று நின்று மின்சாரம் வழங்கப்படுவது மிகவும் வேதனைக்குரியதாயுள்ளது. மிக அவசியமான நேரத்தில் மின்சாரத்தை நிறுத்துவது பொருத்தமானதல்ல.

மின்சார சபையினர் தவறாது பாவனையாளர்களிடமிருந்து மாதம் 225 ரூபா இல் இருந்து 350 ரூபா வரை அறவிட்டு வருகின்றனர்.

தற்பொழுது மின்சாரம் வெட்டப்படும் நேரத்தினை மாற்ற முடியாதா?

மின்சார சபையினர் மக்கள் தேவையை உணர்ந்து சிறந்த சேவையை வழங்க ஆவன செய்வார்களா?

*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*

**இ.சந்தானகோபாலன்**
**கு.குமாரசாமி**

### நேர்முகப் பரீட்சையை நடத்துக!

மாகாண சுகாதார திணைக்களத்தினால் யாழ்.மாவட்டத்தில் 50 பேருக்கான சுகாதார சுத்திகரிப்பாளர் பணிக்கான நேர்முகப்பரீட்சை கடந்த ஒக்டோபர் மாதம் 6 ஆம் திகதி நடத்த திட்டமிடப்பட்டிருந்த போதும் சில விசமிகளின் செயற்பாட்டால் அது நடத்தப்படவில்லை.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயத்தில் தலையிட்டு 50 பேருக்குமான நேர்முகப்பரீட்சையை நடத்தி தகுந்தவர்களுக்கு அந்த வேலைகள் கிடைக்க ஆவன செய்யுமாறு பணிவாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

*யாழ்ப்பாணம்.*

**'இளையவன்'**
(பாதிக்கப்பட்டவர்கள் சார்பில்)

### பொறுப்பற்ற சாரதியின் நடத்தையால் பயணிகள் சிரமம்

மக்களுக்குச் சேவை செய்வதற்கு என்றே உருவாக்கப்பட்டது இலங்கை போக்குவரத்துச் சபை. நெருக்கடியான காலங்களில் அதன் சேவை பாராட்டுதற்குரியது. ஆனாலும் ஒரு சில சாரதிகளின் அசட்டையீனங்களால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

கடந்த 06.01.2001ஆம் திகதியன்று ஊர்காவற்றுறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த 777 பாதை இலக்க கடைசி பஸ் நாரந்தனையில் நின்றுவிட்டது. அப்போது சாரதியினால் டீசல் இல்லை என்று விளக்கம் கூறப்பட்டது.

டீசல் வாங்கியும் கூட அதில் விட முடியாது. ஏனெனில் டீசல் விடும் வாயில் பூட்டப்பட்டிருக்கும். எல்லா பஸ்களிலும் டீசல் தாங்கி பூட்டப்பட்டுத்தான் இருக்கும். இதுதான் நடைமுறை.

ஆனால் பஸ்சில் டீசல் இருக்கின்றதா? எவ்வளவு இருக்கின்றது? என்று அவதானித்து பஸ்ஸை பொறுப்பெடுப்பது சாரதியின் முக்கிய கடமையாகும். பொறுப்பில்லாமல் டீசல் முடிந்துவிட்டது என்று கூறுவது சரியா?

777 பாதை இலக்க கடைசி பஸ்சில் பயணம் செய்பவர்களில் அதிகமானோர் உதவி அரசாங்க அதிபர் பணிமனை, பிரதேச சபை, மக்கள் வங்கி, தபாலகம் போன்ற திணைக்களங்களைச் சேர்ந்த ஊழியர்கள் ஆவர். அவர்களிலும் பெண்களே அதிகம்.

அன்றைய தினம் அனைவரும் பொலீஸாரின் வாகனம் மூலம் அல்லைப்பிட்டிக்கு வந்து அங்கிருந்து லொறி ஒன்றில் ஏறி மாலை ஆறு மணிக்கு யாழ்ப்பாணத்தை அடைய நேரிட்டது.

பயணிகளுக்கு இவ்வாறு சிரமம் ஏற்படுவதை இனிமேலாவது தடுக்க சம்பந்தப்பட்டவர்கள் முயற்சிக்க வேண்டும்.

*தாவடி.*

**குமாரசாமி,**
**மோகன்ராஜ்.**

# மலேரியாவால் கர்ப்பிணிகளுக்கு ஏற்படும் ஆபத்தைத் தவிர்க்கவே குளோறோகுயின்

## யாழ்.பிராந்திய மலேரியா தடை இயக்க வைத்திய அதிகாரி விளக்கம்

## மக்கள் மன்றம்

01.02.2001 உதயனில் மக்கள் மன்றத்தில் டாக்டர்.சி.யமுனானந்தாவினால் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் சுகாதார திணைக்களத்தின அறிவுறுத்தல்களுக்கு முரணாக இருப்பதனாலும், மலேரியா கட்டுப்பாட்டுக்கு எடுக்கும் நடவடிக்கைக்கு குந்தகம் விளைவிக்கக் கூடியது என்பதாலும் மேலும் மக்கள் மனத்தில் சந்தேகங்களை ஏற்படுத்தி கர்ப்பவதிகளினதும் பிறக்கும் சிசுக்களின் நலனுக்கும் பங்கம் விளைவிககலாம் என்பதால் பிராந்திய மலேரியா தடை இயக்க வைத்திய அதிகாரி என்ற முறையில் சில விளக்கங்களை முன் வைக்க விரும்புகிறேன்.

யாழ்.மாவட்டத்தில் 1998 ஆம் ஆண்டு மொத்த மலேரியா நோயாளர்களின் எண்ணிக்கை 47,802 ஆகும். இது இலங்கையின் மொத்த மலேரியா நோயளர்களின் எண்ணிக்கையில் கணிசமான தொகையான படியால யாழ்.மாவட்டத்தை மலேரியா கூடிய பிரதேசமாக கணித்து தடுப்பு நடவடிக்கைகள் முடக்கி விடப்பட்டன.

இத் தடுப்பு நடவடிக்கைகளின் ஓர் அம்சம் கர்ப்பவதிகளுக்கு மலேரியா வராமல் தடைசெய்வதாகும். காரணம் காபபவதிகளுக்கு மலேரியாவினால் பீடிக்கப்படும்வாய்ப்புக்கள் மற்றவர்களிலும் பார்க்க நான்குமடங்கு அதிகம். அத்துடன் கர்ப்ப காலத்தில மலேரியாவினால் தாக்கப்பட்டால் கர்ப்ப சிதைவு, இரத்தச்சோகை, நிறை குறைவான குழந்தைகள் பிறப்பது, சாப்பேறு அத்துடன் மூளை மலேரியா ஏற்பட்டால் தாய் மரணம் என்பன ஏற்படலாம்.

இதனால் கர்ப்பவதிகளுக்கு மலேரியா வராமல் தடுப்பதற்காக கிழமைக்கு இரண்டு குளோறோகுயின் வில்லைகள் கொடுத்து வருகின்றோம். இது யாழ்.மாவட்டத்தில் மட்டுமல்ல இலங்கையின் பல பாகங்களிலும் உலகத்தின சில பகுதிகளிலும் நடைமுறைப்படுததப்படுகின்றது.

கடந்த கால அனுபத்தில் தற்போது யாழ்.மாவட்டத்தில் கர்ப்பவதிகளுக்கு மலேரியா ஏற்படுவது இல்லையெனலாம். தற்போது யாழ்.மாவட்டத்தில் மலேரியா கட்டுபாட்டு நடைமுறைகள் செயல்படுத்தப்படுகின்றன. அதில் வலைகளும் அடங்கும். பலருக்கு வலைகளும் கொடுக்கப்படுகின்றன. எல்லோருக்கும் இலவசமாகக் கொடுப்பதற்கு போதிய வலைகள கிடைக்கவில்லை. அத்துடன் வலை இருந்தாலும் எல்லோரும வலைக்குள் உறங்குவதில்லை.

மேற்படி விடயங்களை ஆராயும் போது உலக சுகாதார ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் நடைமுறைப்படுத்தப்படும் இத் திட்டமானது யாழ்.மாவட்டத்தில் மலேரியாத் தாக்கம் குறைவடையும்வரை நடைமுறைபடுத்தப்படவேண்டியதொன்றாகும்.

மலேரியாவின் தாக்கம் குறைவடையும்போது இம்முறையானது நிறுதப்படலாம்.

வைத்தியகலாநிதி

**க.தா.சிவபாதம்.**

தற்போது ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் தை மாதம் தொடக்கம் இதை நிறுத்தியுள்ளோம். மற்றைய பகுதிகளில் தொற்றும் வாய்ப்புக்கள் குறையும் பொழுது நிறுத்தப்படும்.

மேலும் 1998ஆம் ஆண்டு 47,802 ஆக இருந்த மலேரியா நோயாளர்களின் எண்ணிக்கை 1999 இல் 32,915 ஆகக் குறைந்து 2000 ஆம் ஆண்டில் 7,242 ஆகக் குறைந்துள்ளதை இச்சந்தர்ப்பத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

# தரமற்ற பொருள்கள் என்றால் மக்களுக்கு விநியோகிக்காதீர்!

## ப.நோ.கூ.முகாமையாளருக்கு அறிவுறுத்து

தென்மராட்சி, பெப். 9

நிவாரண விநியோகத்தின் போது தரமற்ற பொருள்களைப் பாவனையாளர்களுக்குக் கண்டிப்பாக வழங்க வேண்டாம். தரமற்ற பொருள்கள் எனத் தெரிந்தால் உடனடியாக அவற்றை சங்கத்தின் மொத்த நிலையத்திற்கு மாற்றம் செய்து தரமான பொருள்களையே பெற்று வழங்க வேண்டும். நிறைகளும் சரிவர வழங்கப்படல்வேண்டும். இவற்றிற்கு அமைவாக செயல்படாவிடின் ஏற்படும் விளைவுகளுக்கு தாங்களே பொறுப்பாளிகளாவீர்கள்.

இவ்வாறு சாவகச்சேரி ப.நோ. கூ. சங்கக் கிளைக் கடைகளில் பணிபுரியும் முகாமையாளர், விற்பனையாளர் ஆகியோருக்கு சங்கப் பொது முகாமையாளர் சி. தேவகுமார் சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார்.

கடந்த வாரத்தில் ப.நோ. கூ. ச. கிளை முகாமையாளர் ஒருவரும் விற்பனையாளரும் மோசடியில் ஈடுபட்டமை கண்டுபிடிக்கப்பட்டு, அவர்கள் தண்டிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது

[க-117]

# மாகாண அமைச்சின் ஏற்பாட்டில் விளையாட்டுப் பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம், பெப். 9

வடக்கு — கிழக்கு மாகாண கலை பண்பாட்டு விளையாட்டு அமைச்சினால் மெய்வன்மை, உதைபந்தாட்டம் மற்றும் வலைப்பந்தாட்டப் பயிற்சி முகாம்கள் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ளன.

மெய்வன்மைப் பயிற்சி முகாம் யாழ். வை.எம்.சி.ஏயின் அனுசரணையுடன் எதிர்வரும் 14 ஆம் திகதி தொடக்கம் 19 ஆம் திகதி வரையும் வை.எம்.சி.ஏயில் நடைபெற உள்ளது.

உதைபந்தாட்டம் மற்றும் வலைப்பந்தாட்டப் பயிற்சி முகாம் 21 ஆம் திகதி தொடக்கம் 24 ஆம் திகதி வரை யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கிலும் யாழ். மத்திய கல்லூரியிலும் நடைபெறவுள்ளது.

மாவட்ட ரீதியில் 40பயிற்சியாளர்கள் இந்த வதிவிடப் பயிற்சி முகாமில் கலந்து கொள்ளவுள்ளனர். இந்தப் பயிற்சி முகாமினை நடத்துவதற்காக மாகாண அமைச்சின் அதிகாரிகள் குழு ஒன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளது

ஐ-5)


## தேங்காய் விற்பனவுக் கூறுவிலை

மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபையின் கரம்பகத் தோட்டத் தேங்காய்கள் கூறுவிலை மூலம் நாளை(10-02-2001) சனிக்கிழமை காலை 10மணிக்கு அல்வாய், கண்டாவத்தையில் உள்ள சபை அலுவலகத்தில் விற்பனவு செய்யப்படும். கூறுவிலை விண்ணப்பப்படிவம் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

- பொறுப்பதிகாரி.

(சி/15220)



உ

பேராசிரியர்

## அ. சண்முகதாஸ்

அவர்களின்

வடமராட்சி மணிவிழா மலருக்கூடாக நடத்தும்

## அறிவுப் போட்டி

நிறைவு திகதி 21-02-2001

விவரம் மணிவிழா மலரில் உள்ளது.

வடமராட்சி மணிவிழா மலர் பெற்றுக்கொள்ளுமிடங்கள்

1) வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானம்.
2) கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூட்டுறவு சங்க பணிமனை
3) சிதம்பரப்பிள்ளை பொத்தகசாலை, நெல்லியடி.
4) லெக்சுமி புத்தகசாலை, நெல்லியடி.

மணி விழா மலர் 200/- மட்டும்

மணிவிழா சபை,
வடமராட்சி.

(83949)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

செங்குந்த இந்துக் கல்லூரியின் முதல் மாணவரும்

இக் கல்லூரியில் பல காலம் ஆசிரியப் பணி புரிந்து பல கல்வி மான்களை உருவாக்கிய வரும் ஓய்வு பெற்ற பின்னரும் இக் கல்லூரி மாணவருக்கு பல்வேறு சமயப் பணிகளை ஆற்றி வருபவருமான

## உயர் திரு. க. நடராசா

(முன்னாள் கணித ஆசிரியர்)

அவர்கள் சமாதான நீதிவானாக நியமனம் பெற்றமையையிட்டு அவரது சேவை மேலும் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்,
மாணவர்கள்,
யா/செங்குந்த இந்துக் கல்லூரி.

(83948)


# யாழ். கல்வியியல் கல்லூரிக்கு மேலும் 23 பேருக்கு அனுமதி

யாழ்ப்பாணம், பெப். 9

யாழ். கல்வியியல் கல்லூரிக்கு மேலும் 23 பேர் அனுமதி பெற்றுள்ளனர்.

கல்லூரிக்கு அனுமதி பெறுபவர்களில் 120 பேரின் விவரங்கள் முன்னரே வெளியாகியிருந்தன.

புதிதாக அனுமதி பெற்றவர்களின் விவரம் வருமாறு:-

### ஆரம்பக்கல்வி

★ எஸ். மீரா — 'மணி இல்லம்', அச்சுவேலி.
★ ஏ. சசிகலா — அச்சுவேலி.
★ எல். ஆர். ஐ. மேறிட்டா — ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
★ வி. கோமேஸ்வரி — மயிலிட்டி வடக்கு, மயிலிட்டி.
★ ரி. பிரபாலினி — கல்வளை வீதி, சண்டிலிப்பாய்.
★ எஸ். தயாளினி — சிவகாமி அம்மன் கோயிலடி, இணுவில் கிழக்கு.
★ கே. கனகா — இடைக்காடு, அச்சுவேலி.
★ பி. சர்மிளா — புத்தூர் கிழக்கு.
★ பி. நிமதி — கோண்டாவில் கிழக்கு.
★ எஸ். பிரதீபா — முருகன் கோயிலடி, வல்வெட்டித்துறை.

### விஞ்ஞானம்

★ பி. கஜேந்திரன் — நாவற்காடு, அச்சுவேலி.
★ ஜி. சுகிவன் — அன்னசத்திரலேன், கந்தர்மடம்.
★ ரி. பி. கேசவன் — கொக்குவில் மேற்கு
★ எஸ் தயாபகரன் — ஆரையம்பதி, மட்டக்களப்பு.
★ கே. தயேந்திரன் — கொடியாரப்பு, வவுனியா.
★ பி. கஸ்தூரிபாய் — இடைக்காடு, அச்சுவேலி.
★ எஸ். மசிந்தனி — சூராவத்தை, சுன்னாகம்.
★ வி. அம்பிகை — வியாபாரிமூலை, பருத்தித்துறை.

### கணிதம்

★ ஏ. தயாளன் — மூளாய், சுழிபுரம்.
★ எம். அசோக்குமார் — உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை.
★ எஸ். லதீசன் — மல்லாவி.
★ என். கஜன் — தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரி.
★ எஸ். சசிதரன் — புன்னாலைக்கட்டுவன் வடக்கு, சுன்னாகம். (ஐ-3)

## கூட்டம்

அரியாலை, பெப். 9

யாழ். தெற்குபிரதேசசென். ஜோன்ஸ் அன்புலன்ஸ் படைப்பிரிவினருக்கான கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் மாவட்ட சென். ஜோன்ஸ் அன்புலன்ஸ் படைப்பிரிவின் ஆணையாளர் எஸ். செல்வரஞ்சன் தலைமையில் நடைபெறும்.

(ஐ-17)

## புவியியல்துறையில் பயிற்சி செயலமர்வு

யாழ்ப்பாணம், பெப் 9

கனடாவில் உள்ள பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகமும் யாழ். பல்கலைக்கழக புவியியல் துறையும் இணைந்து நடத்தும் வட இலங்கையின் திட்டமிடல் கல்வித் திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கான இரண்டு நாள் பயிற்சிச் செயலமர்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பலகலைக்கழக புவியியற்றுறைத் தலைவர் இரா. சிவச்சந்திரன் தலைமையில் புவியியற்றுறை இரண்டாம் மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் பயிற்சிச் செயலமர்வில் கலந்து கொண்டு கருத்துரைகள் வழங்குவதற்கு பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவர்களான துணைப் பேராசிரியர் கலாநிதி பசில் வில்லியம் வன்ஹொர்ன், இணைப் பேராசிரியர் மைக்கல் லியோன் லீவ் ஆகியோர் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளனர்.

வட இலங்கையின் திட்டமிடல் கல்வித் திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கான ஆலோசனைகள் பற்றி பல்துறை சார்ந்த அறிஞர்கள் பலரும் கருத்துரைகள் வழங்கவுள்ளனர்.

மீன்பிடி, விவசாயம் மற்றும் கைத்தொழில்கள் ஆகியவற்றில் அபிவிருத்தி காண்பதற்கான மனித வளத்தை உருவாக்குவதற்கு பல்துறை அணுகுமுறைகள் பற்றியும் திட்டமிடல் கல்விக்கான கற்கை நெறித் திட்டம் தொடர்பாகவும் இச் செயலமர்வில் ஆராயப்படும்.

கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 12 ஆம், 13 ஆம், 14 ஆம் திகதிகளில் வட இலங்கையின் மீன்அபிவிருத்தி மீள் நிர்மாணம் பற்றிய கருத்தரங்கு பல்கலைக்கழகத்தின் புவியிற்றுறை மண்டபத்தில் நடைபெற்றது. அதன் தொடர் நிகழ்வாகவே இன்றைய செயலமர்வும் இடம்பெறவுள்ளது.

(ஐ—10)

## கிளிநொச்சி மாவட்ட மாணவர் ஒன்றியகூட்டம்

யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி மாவட்ட மாணவர் ஒன்றிய பொதுக் கூட்டம் இன்று பிற்பகல் 4.30 மணிக்கு முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும்.

(ம—6—ரி)

## வருடாந்தக் கலந்துரையாடல் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், பெப். 9

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த சுகாதாரசேவைகள் மாகாண பிரதிப் பணிப்பாளரின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களின் தலைவர்களுக்கான வருடாந்தக் கலந்துரையாடல் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் செல்வி உ. சிவபாதசுந்தரம் அறிவித்துள்ளார்.

கலந்துரையாடல் நடைபெறும் புதிய திகதி பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அவர் கூறினார். (ஐ-3)

★ ★ ★

கைதுசெய்யப்பட்டு காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தின் பிரதிநிதிகளுக்கும் ஐ. நா. அதிகாரிகளுக்கும் இடையில் இன்று இடம்பெறவிருந்த கலந்துரையாடல்பிற்போடப்பட்டுள்ளதாக சங்கத் தலைவர் அறிவித்துள்ளார்.

(ஐ-3)

## 246 பொதிகளில் தபால்கள் வந்தன

யாழ்ப்பாணம், பெப். 9

காங்கேசன்துறைக்கு நேற்று வந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் குடாநாட்டுக்கானவெளியூர்த் தபால்கள் அடங்கிய 246 பொதிகள் எடுத்து வரப்பட்டன.

தபால்கள் யாவும் தரம் பிரிக்கப்பட்டு இன்று விநியோகம் செய்யப்படவுள்ளதாக யாழ். பிரதம தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதே கப்பலில் குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட தபால்கள் அடங்கிய 49 பொதிகள் எடுத்துச் செல்லப்பட்டன.

(ஐ-10-ரி)

## தவில் வித்துவான் காலமானார்

'லயஞான விவகார பாரதி' தவில்வித்துவான் கைதடி கே. பழனிவேல் (வயது 70) அண்மையில் காலமானார்.

நீண்டகாலமாகச் சுகவீனம் அடைந்திருந்த இவர் கைதடியில் இருந்து இடம்பெயர்ந்து இணுவிலில் தங்கியிருந்தார்.

புகழ்பூத்த தவில் கலைஞராகத் திகழ்ந்த இவரின் வித்துவத் தன்மையைப் பாராட்டி 20க்கும் மேற்பட்ட பட்டங்கள் வழங்கப்பட்டன.

(ஐ-3)

## சங்காபிஷேகம்

ஏழாலையம்பதி முடிமன்னர் ஆலயத்தில் மண்டலாபிஷேகப் பூர்த்தி தினமான இன்று வெள்ளிக்கிழமை சங்காபிஷேகம் இடம்பெறும்.

சங்காபிஷேகத்தைத் தொடர்ந்து அருளுரைகளும், பக்திப்பாடல்களும் இடம்பெறும். (ஐ-3)

## சிங்களவர் - ...

[3 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கத்தாலும் உறுதியான நடவடிக்கைகளாலும் நிலைநாட்டினார். அதன் பயனாக அரசாங்கம் அந்த நடவடிக்கையை கைவிட்டது.

அரசியல் அமைப்புச் சீர்திருத்தத்திற்கான சோல்பரி ஆணைக்குழுவினரால் தமிழ் காங்கிரசின் சாட்சியத்தைக் கேட்பதற்காக ஒதுக்கிய மூன்று நாள்களில் ஒரு நாள் முழுவதும் மலைநாட்டுத் தமிழர்களுக்காக வாதாடினார். இதன் பயனாக மலைநாட்டுத் தமிழர்களுக்கு 14 வீதம் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட வேண்டுமென்று சோல்பரிக் குழுவினர் தமது அறிக்கையில் சிபாரிசு செய்தனர்.

1930 ஆம் ஆண்டு தென்னிந்தியத் தமிழர்களை இலங்கையில் பிரவேசிப்பதைவரையறுக்க வேண்டுமென்று ஒரு கிளர்ச்சி எழுந்தது. இதனை ஆராய்வதற்கு ஒரு விசாரணைக்குழு சேர் எட்வேட் ஜக்சன் தலைமையில் நியமிக்கப்பெற்றது. திரு ஜி. ஜி. பொன்னம்பலம் இவ்விசாரணைகுழு முன்தோன்றி இந்தியத் தமிழர்களைஎவ்விதகட்டுப்பாடும் அற்ற முறையில் இலங்கைக்கு வரலாமெனத் தீவிரமாக வாதாடினார். இதன் பயனாகத் தென்னிந்தியத் தமிழர்கள் இலங்கைக்கு வருவதைத்தடுப்பதற்கான எவ்வித நடவடிக்கையும் அப்போது எடுக்கப்படவில்லை.

### யோசனையை ஏற்றிருந்தால்

இலங்கை இந்தியக் காங்கிரசும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரசும் ஐக்கிய முன்னணி அமைத்து ஒரு கொடியின் கீழ் நின்று 1947ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் கலந்து கொள்ள வேண்டுமென்று திரு. பொன்னம்பலம் யோசனை தெரிவித்தார். அந்த யோசனையை இலங்கை இந்தியக் காங்கிரஸ் ஏற்றிருந்தால் இன்று தமிழினத்தின் நிலைமை வேறுவிதமாக அமைந்திருக்கும்.

1948 ஆம் ஆண்டு நடைபெற்ற முதலாவது சுதந்திர தின விழாவில் நந்திக் கொடியையும் ஏற்றுவித்த பெருமை அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்களையே சாரும்.

நாடாளுமன்றத்தில் முதல் முறையாக தமிழில் உரையாற்றினார் என்ற பெருமையும் அமரர் ஜி. ஜிக்கே உரியது. ★

### ஜெருசலேத்தை மீட்பதற்காக

# அதிபர் சதாம் புனித போருக்கு பெரும்படை திரட்டுகிறாராம்



பாக்தாத், பெப். 9

ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசேன் இஸ்ரேலுக்கு எதிராகப் புனித போர் புரிவதற்காகப் படை திரட்டி வருகிறார்.

ஈராக்கிய மூத்த ராஜதந்திர அதிகாரிஒருவர் இதனை உறுதிப் படுத்தினார்.

இஸ்ரேலின் ஆக்கிரமிப்பிலிருந்து ஜெருசலேத்தை விடுவிக்க சதாம் தலைமையில் புனித போர் தொடுக்கப்படவுள்ளதாகவும்—

இதற்காக 60 லட்சத்துக்கும் அதிகமானோரைக் கொண்ட இஸ்லாமிய ஜிகாத் சேனை திரட்டப்படுவதாகவும்—

அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

சில மாதங்களுக்கு முன்னதாக இஸ்ரேலுக்கு எதிராக ஈராக் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருப்பதாகச் செய்திகள் கசிந்தன.

இதனை ஈராக் இதுவரை உத்தியோக பூர்வமாக மறுக்கவில்லை. இதனால் இஸ்ரேலின் புதிய பிரதமர் ஏரியல் ஷெரோன் கடும்போக்கை கடைப்பிடித்தால் மேற்காசியாவில் அமைதி குலையும் என்ற அச்சம் அதிகரித்துள்ளது.

(ஒ–10)

# இராணுவ ஆட்சி நடக்கும் நாடுகள் ஐ. நா. படையில் பங்கேற்கக் கூடாது

## இந்தியப் பிரதிநிதி வலியுறுத்தல்

நியூயோர்க், பெப். 9

ஜனநாயக ஆட்சி அகற்றப்பட்ட நாடுகளின் இராணுவத்தினர், ஐ.நா. அமைதிப்படையில் பங்கேற்பதற்கு இந்தியா எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இந்தியாவின் ஐ. நாவிற்கான பிரதிநிதி சத்திய பிரதாப்வால் பாதுகாப்புச்சபையில் இதனைத் தெரிவித்தார்.

ஜனநாயகத்தைத் தூக்கி எறிந்தவர்களைக் கொண்டு சியாராலியோனில் அமைதியை ஏற்படுத்த முனைவது ஜனநாயகத்தை இழிவுபடுத்துவது போலாகும் என்றும் அவர் கூறினார்.

ஜனநாயக ஆட்சி கவிழ்க்கப்பட்ட பாகிஸ்தானின் இராணுவம்; சியாராலியோனில் பணியாற்றும் ஐ. நா. அமைதிப்படையில் பங்கேற்றுள்ளதையே பிரதாப்வால் குறிப்பிட்டதாகக் கருதப்படுகிறது.

பாதுகாப்புச் சபையில் மேலும் பேசுகையில்:–

ஐ. நா. பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் சில உறுப்பு நாடுகள் முக்கிய ஆயுத உற்பத்தி மற்றும் ஏற்றுமதியாளர்களாக உள்ளன.

உலகில் சட்ட ரீதியான அரசுகளுக்கு எதிராக வன்முறைகளைத் தூண்டும் தீவிரவாதிகள், கிளர்ச்சியாளர்கள் ஆகியோருக்கு ஆயுதங்களை வழங்குவதில்லை என்று அவை உறுதியளிக்க வேண்டும் எனப்பிரதாப்வால் கோரினார்.

சட்ட ரீதியான பாகிஸ்தானிய ஆட்சிக்கு எதிராகக் கிழக்குப் பாகிஸ்தானிய கிளர்ச்சியாளர்களுக்கு இந்தியா உதவியளித்து பங்களாதேஷ் என்ற நாடு உருவாகக் காரணமாக இருந்தது குறிப்பிடத்தக்கது. (ஒ-7)

## இந்தியாவின் ஜார்கண்டில்

# சுரங்கத்துக்குள் சிக்கியவர்களில் ஒரு பணியாளர் உயிருடன் மீட்பு!

ராஞ்சி, பெப். 9

இந்தியாவின் ஜார்கண்ட் மாநிலத்தில் 'தன்பாத்' நிலக்கரிச் சுரங்கத்துக்குள் சிக்கியிருந்த பணியாளர்களில் ஒருவர் 6 நாள்களின் பின்னர் உயிருடன் மீட்கப்பட்டார்.

சுரங்கத்துக்குள் தேங்கியிருந்த வெள்ளநீர் இறைக்கப்பட்ட பின்னர் நேற்றுக்காலை உட்புகுந்த மீட்புப்பணியாளர்கள் சலீம் அன்சாரி என்ற பணியாளரை உயிருடன் மீட்டனர்.

அன்சாரி உணர்விழந்த நிலையில் இருந்ததாகவும்—

தற்போது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள அவரது உடல்நிலை சீராகி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை தடுப்புச் சுவரை உடைத்துக் கொண்டு நிலக்கரிச் சுரங்கத்துக்குள் வெள்ளம் உட்புகுந்ததில் சிக்கிய 35 பணியாளர்களில் உயிருடன் முதலில் மீட்கப்பட்டவர் அன்சாரி ஆவார்.

மீட்புக்குழுவினர் நம்பிக்கை இழந்திருந்த வேளையில் சுரங்கத்துள் சிக்கிய ஒருவர் உயிருடன் மீட்கப்பட்டதை அடுத்து மேலும் சிலரையாவது உயிருடன் மீட்க முடியும் என்ற நம்பிக்கையுடன் மீட்புப்பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் சுழியோடிகளால் 'கேபின்' பணியாளர் ஒருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது தெரிந்ததே.

(ஒ-10)

# இந்தியாவில் புகைத்தலுக்கு எதிராகப் புதிய சட்டமூலம்

## பலனளிக்குமா என்பதில் சந்தேகம்

புதுடில்லி, பெப் 9

பொது இடங்களில் புகைப்பிடிப்பதை தடை செய்யும் சட்ட மூலத்துக்கு இந்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

18 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு புகைப் பொருள்களை விற்பதை இந்தச் சட்டமூலம் தடை செய்கிறது. புகைப் பிடிக்காதவர்கள், புகைப்பிடிப்பவர்கள் மூலம் பாதிப்படைவதை தவிர்க்கவே புதிய சட்டமூலம் உருவாக்கப்பட்டுள்ளது.

சிகரெட், புகையிலை தயாரிப்பு நிறுவனங்கள் விளையாட்டு மற்றும் கலாசார நிகழ்ச்சிகளை நிதி வழங்கி நடத்துவது முற்றாகத் தடுக்கப்பட்டுள்ளது.

பொது இடங்களில் புகைப் பிடிப்பவர்களுக்கு 100 ரூபா அபராதம் விதிக்கப்படும்.

இதேவேளை இந்தியாவில் பொது இடங்களில் மது அருந்துவதும், மது விளம்பரங்களைக் காண்பிப்பதும் சட்டப்படி தடை செய்ததைச் சுட்டிக்காட்டும் பொதுநல ஆர்வலர்கள், பொது இடங்களில் மது அருந்துபவர்கள் லஞ்சம் கொடுத்து தப்புவது அதிகரித்ததையும் –

மது வகைகளின் பெயரில் 'பிளேன் சோடா' தயாரித்து அதற்கு விளம்பரம் செய்வது போல் மதுவுக்கு தாராளமாக விளம்பரம் செய்வதையும் குறிப்பிட்டு அத்தகைய நிலையே புதிய சட்டமூலத்தால் ஏற்படும் எனக் கூறுகின்றனர்.

(ஒ-7)

## அமெரிக்காவுக்கு இஸ்ரேலியத் தூதுக்குழு

டெல்அவிவ், பெப். 9

இஸ்ரேலின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்துவதற்காக தமது தூதுக் குழு ஒன்றை புதிய பிரதமர் ஏரியல் ஷெரோன் அமெரிக்காவுக்கு அனுப்பியுள்ளார்.

இது போன்ற தூதுக்குழுக்கள் மேற்காசியப் பிரச்சினையில் புதிய அரசின் செயற்பாடுகள் குறித்து விளக்கமளிப்பதற்காக ஐரோப்பிய நாடுகளுக்கும் அனுப்பப்பட உள்ளதாக இஸ்ரேலிய பிரதமர் அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ஒ)

# கும்பமேளாவில் 'கல்பவாசி'யை பக்தர்கள் நிறைவு செய்தனர்

கும்பநகர், பெப். 9

இந்தியாவின் அலகாபாத் நகரில் இடம்பெறும் கும்பமேளாவில் 'கல்பவாசி' விரதம் அனுஷ்டித்த பக்தர்கள் நேற்றுடன் தமது விரதத்தை நிறைவு செய்து கொண்டனர்.

கும்பமேளா தொடங்கியதில் இருந்து கடந்த ஒரு மாதகாலம் சுமார் 5 லட்சம் பக்தர்கள் கங்கைக் கரையில் தங்கியிருந்து 'கல்பவாசி' விரதத்தை அனுஷ்டித்து வந்தனர்.

'மாஹி' பௌர்ணமி தினமான நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று வரை விரதம் அனுஷ்டித்த பக்தர்கள்—

திரிவேணி சங்கமத்தில் நீராடித் தமது விரதத்தை முடித்துக் கொண்டனர்.

45 நாள்கள் நீடிக்கும் கும்பமேளா விழாவின் இறுதி நிகழ்வுகள் நெருங்குவதால் திரிவேணி சங்கமத்தில் நீராடுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. [ஒ-10]

## அதிபர் மாளிகை அருகே ஒருவர் கைது!

வாஷிங்ரன், பெப். 9

அமெரிக்க அதிபரின் மாளிகைக்கு வெளியே துப்பாக்கியுடன் நடமாடிய ஒருவரை அதிபரின் பாதுகாவலர்கள் சுட்டுப் பிடித்துள்ளனர்.

வெள்ளை மாளிகையின் மேற்கு நுழைவாயில் அருகே சந்தேகத்துக்குரிய வகையில் நடமாடிய இந்த நபரின் காலில் சுட்டுக்காய மேற்படுத்திய காவலர்கள் அவரைக் கைது செய்தனர்.

அந்தச் சமயத்தில் அதிபர் புஷ் மாளிகையில் இருந்ததாகக் கூறப்படுகிறது.

# பெண் போராளி பற்றிய படத்துக்கு அனுமதி வழங்கக் கோரிக்கை

## திரைப்படத் துறையினர் மகஜர்

சென்னை, பெப். 9

பெண் போராளி ஒருவரது வாழ்க்கையைச் சித்திரிக்கும் 'காற்றுக்கென்ன வேலி' என்ற தமிழ்த் திரைப்படத்தைத் திரையிட எதிர்வரும் 17 ஆம் திகதிக்குள் அனுமதி தர வேண்டும் என்று கோரிக்கை விடப்பட்டுள்ளது.

தென்னிந்தியத் திரைப்பட இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள், எழுத்தாளர்கள் மற்றும் மனித உரிமைப் பணியாளர்கள் ஆகியோர் அடங்கிய செயற்குழு ஒன்று திரைப்படத் தணிக்கை சபைக்கு இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

'காற்றுக்கென்ன வேலி' திரைப்படத்துக்கு பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதிக்குள் திரையிடத் தணிக்கைச் சான்றிதழ் அனுமதி தரப்படாவிட்டால், அனுமதி பெறாமலேயே திரைப்படம் திரையிடப்படும் என்று அதன் இயக்குநர் புகழேந்தி எச்சரித்துள்ளார்.

விடுதலைப் புலிகளைத் தொடர்புபடுத்தும் விடயங்கள் எதுவும் 'காற்றுக்கென்ன வேலி' திரைப்படத்தில் இடம்பெறவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

தணிக்கைச் சபையின் அனுமதியில்லாமலேயே படத்தை வெளியிடும் முடிவை அறிவித்துள்ள இயக்குநர் சங்கப் பிரமுகரும் பிரபல இயக்குநருமான பாரதிராஜா, தணிக்கைச் சபை இயக்குநர் ஒருவரின் கருத்து வெளியிடும் சுதந்திரத்தைத் தடை செய்வதாகக் குறை கூறியுள்ளார்.

கடந்த ஆண்டு தயாரிக்கப்பட்ட 'காற்றுக்கென்ன வேலி' திரைப்படம் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த பெண் போராளி பற்றிய கதையைக் கொண்டுள்ளதாகக் கூறி இந்திய தணிக்கைச் சபை திரையிட அனுமதி மறுத்தது.

இதனை எதிர்த்து உண்ணாவிரதம் உட்படப் பல போராட்டங்களைத் தமிழ்த் திரையுலகினர் நடத்தி வருகின்றனர்.

வன்முறை மற்றும் ஆபாசக் காட்சிகளைத் திரைப்படங்களில் தாராளமாக அனுமதிக்கும் இந்தியத் தணிக்கை அதிகாரிகள் சில அரசியல்வாதிகளைத் திருப்திப்படுத்துவதற்காக நல்ல திரைப்படங்களுக்கு அனுமதி மறுப்பது நீண்டகாலமாகத் தொடர்வதாகத் தமிழ்த் திரையுலகினர் தெரிவித்துள்ளனர்.

சில வருடங்களின் முன்னர் இயக்குநர் ஆர். கே. செல்வமணி தயாரித்து இயக்கிய 'குற்றப் பத்திரிகை' என்ற திரைப்படத்துக்கு இன்றுவரை திரையிட அனுமதி கிடைக்காததை அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் அரசியல்வாதிகளின் பங்கு பற்றியும், கொலையில் சம்பந்தப்பட்டவர்களது தரப்பு நியாயங்கள் குறித்தும் 'குற்றப் பத்திரிகை' திரைப்படத்தில் அலசப்பட்டிருந்தது. அதனால் தமது குட்டுகள் அம்பலமாகிவிடும் என்று அஞ்சிய சில அரசியல்வாதிகளின் நிர்ப்பந்தத்தாலேயே அந்தத் திரைப்படம் தடை செய்யப்பட்டதாகக் கூறப்பட்டது.

தமிழகக் கரையில் படகு ஒன்றில் படுகாயங்களுடன் வந்திறங்கும் பெண் போராளிக்கும் அவரைக் காப்பாற்றிச் சிகிச்சையளிக்கும் இந்திய மருத்துவருக்கும் ஏற்படும் உறவை 'காற்றுக்கென்ன வேலி' திரைப்படம் சித்திரிப்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ)

# இஸ்ரேலின் புதிய பிரதமருக்கு அரபுலீக்தலைவர்கள் எச்சரிக்கை

மேற்காசிய அமைதித்திட்டத்தில் இருந்து இஸ்ரேலின் புதிய பிரதமர் ஷெரோன் பின்வாங்கக் கூடாது என்று அரபு லீக் தலைவர்கள் எச்சரித்துள்ளனர்.

சமாதான முயற்சிகளில் முட்டுக்கட்டை தோன்ற இஸ்ரேல் காரணமாக இருந்தால் அதன் மீதான பலஸ்தீனர்களின் வன்முறைகள் அதிகரிக்கக் கூடும் என்றும் அரபு லீக் தலைவர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

ஐ. நா. மாநாடு ஒன்றில் கலந்து கொள்வதற்காகச் சென்ற இடத்தில் சந்தித்துப் பேசிய அரபு லீக் தலைவர்கள் மேற்காசிய நிலைமை குறித்து விவாதித்ததாகக் கூறப்படுகிறது.

ஆலோசனையின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அரபு லீக் பேச்சாளர், ஷெரோனின் வலதுசாரி லிகுட் கட்சி அமைதித் திட்டத்துக்கான அடித்தளத்தை அமைக்கவில்லை என்று குறை கூறியுள்ளார். (ஒ — 10)

## பலவீனம் அல்ல என்கிறார் முஷாரப்

இந்தியப் பிரதமர் வாஜ்பாயுடன்பேசியதை பலவீனத்தின் அறிகுறியாகக் கருத வேண்டாம் என்று பாகிஸ்தானிய இராணுவ ஆட்சியாளர் பர்வேஷ் முஷாரப் கூறியுள்ளார்.

சமாதானமுன்முயற்சிகளில் தமக்குள்ள உண்மையான ஆர்வத்தை வெளிப்படுத்தவே தொலைபேசி மூலம் உரையாட முன் வந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல

# பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம், பெப். 9 இம் மாதம் 7 ஆம் திகதி வரையும் வெளியிடங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாக வருமாறு:-

**சங்கானை**

(182197ஏ), (174982ஏ),
(178580ஏ). (178719ஏ).
(178719பி), (178772ஏ),
(178828ஏ), (178828பி),
(179097ஏ), (179070பி),
(179097சி), (179097டி),
(179167ஏ), (179177ஏ),
(179178ஏ), (179178பி),
(179268ஏ), (179366ஏ),
(179383ஏ), [(179433ஏ),
(179433பி), (179433சி),
(179433டி), (179503ஏ),
(181416ஏ), (182634ஏ),

**யாழ்ப்பாணம்**

(173550ஏ), (175630ஏ),
(178045ஏ), (178045பி),
(178045சி), (178045டி),
[178382ஏ[, [178479ஏ],
[179875ஏ], [179875பி],
[179875சி], [179875டி],
[179875ஈ], [179882ஏ],
[179883பி], [179948ஏ],
[179948பி], [179948சி],
[179988ஏ], [180012ஏ],
[180016ஏ], [180088ஏ],
[180088பி], [180088சி],
[180088டி], [180106ஏ],
[180106பி], [180122ஏ],
[180123ஏ], [180130ஏ],
[180131ஏ], [180131பி],
[180131சி], [180170ஏ],
[180191ஏ], [180238ஏ],
]180238பி], [182000ஏ],
[182029ஏ], [182034ஏ],
(182034பி), (182109ஏ),
(182109பி), (182109சி),
(182111ஏ), (182122ஏ),
(182143ஏ), (182143பி),
(182154ஏ).

**கரவெட்டி**

(180034ஏ).

**கோப்பாய்**

(180079ஏ). (180079பி),
(180153பி), (182026ஏ),
(182143ஏ):

**நல்லூர்**

[178064ஏ]. [178064பி],
[178173ஏ], [178293ஏ],
[178372ஏ], [179923ஏ],
[179923பி], [179923சி].
[179985ஏ], [179985பி],
[179985சி], [179997ஏ],
[179997பி], [179997சி].
(180022ஏ), (180022பி),
(180051ஏ), (180051பி),
(180051சி), (180085ஏ),
(180085பி), (180085சி),
(180116ஏ), (180121ஏ),
(180121பி), (180125ஏ),
(180153ஏ), (180158ஏ),
(180167ஏ), (182020ஏ),
(182133ஏ), (182133பி),
(182133சி), (182165ஏ).
(169213ஏ), (175060ஏ),
(175060பி), [(175060சி).
(178636ஏ), (179014ஏ),
(179014பி), (179213ஏ),
(179213பி), (179213சி),
(179213டி), (179214ஏ),
(179214பி), (179337ஏ),
(179337பி).
(179377ஏ), (179399ஏ),
(179504ஏ), (181435ஏ),
(181451ஏ), (181451பி),
(181451சி), (181458ஏ),
(181458பி), (181466ஏ),
(181479ஏ), (181488ஏ),
(181572ஏ), (181605ஏ),
(181624ஏ), (182753ஏ),
(182753பி). (182753சி).

**சண்டிலிப்பாய்**

(169055ஏ), (169055பி),
(169055சி), (169055டி),
(173397பி), (173397சி),
(173397டி), (174881ஏ),
(174881பி), (174881சி),
(175854ஏ), (175854பி),
(175855ஏ), (175929ஏ),
[175929பி], [176822ஏ],
[176822பி], [178567ஏ],
[178567பி], [178621ஏ],
[178708ஏ], [178743ஏ],
[178773ஏ], [178773பி],
[178773சி], [178837ஏ],
[179035ஏ], [179 35பி],
[179035சி], [179035டி],
[179043ஏ], [179074ஏ],
[179074பி], [179074சி],
[179074டி], [179077ஏ],
[179085ஏ], [179085பி],
[179085சி], [179179ஏ],
[179179பி], [179179சி],
[179197ஏ], [197253ஏ],
[179254ஏ], [197254பி],
[179266ஏ],
(179272ஏ), (179274ஏ),
(179289ஏ), (179333ஏ),
(179333பி), (179373ஏ),
(179397ஏ), (179400ஏ),
(179400பி), (179402ஏ),
(179402பி), (179402சி),
(179413ஏ), (179485ஏ),
(179485பி), (179486ஏ),
(181474ஏ), (181491ஏ),
(181491பி), (181491சி),
(181491டி), (181514ஏ),
(181578ஏ).

**தெல்லிப்பழை**

(169171ஏ), (176522ஏ),
(176702ஏ), (178649ஏ),
(178649பி), (178727ஏ),
(178727பி), (178835ஏ),
(178835பி), (179320ஏ),
(179320பி), (181434ஏ).
(181434பி), (181434சி),
(181434டி), (181454ஏ),
(181588ஏ), (181596ஏ),

**உடுவில்**

(175905ஏ), (175905பி),
(178601ஏ), (178601பி),
(178624ஏ), (178942ஏ),
[179261ஏ], [179261பி],
[179216சி], [179367ஏ],
[179367பி], [179367சி],
[179425ஏ], [179434ஏ],
[179455ஏ], [181418ஏ],
[181580ஏ], [181580பி],
[181580சி], [181580டி],
[ம]

---

## சிற்றூர்தி சேவைச் சங்கம்

வடமராட்சி, பருத்தித்துறை

## அறிவித்தல்

05—02—2001 இல் நடைபெற்ற பொதுச்சபைத் தீர்மானத்திற்கமைய சிற்றூர்திப் பதிவுகள் தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

கு நாகேந்திரம்
செயலாளர்

சு. சில்வஸ்ரர்
தலைவர்

(83918)

---

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 1948 — 04 — 12

மறைவு 1997 — 01 — 25

## அமரர் தர்மலிங்கம் கதிர்காமநாதன்

[தறுமு]

[உரிமையாளர், சாந்தி ரான்ஸ்போட்]

திதி; 09 — 02 — 2001

அன்புத் தந்தையே!
எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கே!
எம்மைப் பாசத்தோடு வாழவைத்த
அன்புத் தந்தையே!
ஆண்டு நான்கு சென்றாலும் - நாம்
அடுத்த தேசம் போனாலும்
விட்டுப் பிரியாது உங்கள் நினைவு......

உங்கள் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும்:

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

S. பன்னீர்,
வேலகாடு, ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை.

(83664)

---

## 21 ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம்

கோப்பாய் பெப். 9 வலி. கிழக்கு பிரதேச சபை அலுவலகத்தில் பலதரப்பட்ட தரத்திலும் கடந்த பல வருடங்களாக ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றி வந்த 21 ஊழியர்கள் நிரந்தர நியமனம் பெற்றுள்ளனர்.

பிரதேச சபைத் தலைவர் பூ. குணசிங்கம் உள்ளூராட்சி ஆணையாளருடன் தொடர்பு கொண்டதை அடுத்து கடந்த மாதம் முதலாம் திகதியில் அந்த ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் கிடைத்துள்ளது.

(க — 72)

---

## கண்ணீர் அஞ்சலி

நல்லூர் பிரதேச சபை ஆயுர்வேத வைத்திய அதிகாரி

**திருமதி செள. மகேஸ்வரன்**

அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி இ. விசாலாட்சி

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

**தலைவர், உறுப்பினர்கள்,**
**உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்,**
**நல்லூர் பிரதேச சபை,**

நலன்புரிச்சங்கம். [83931]

---

சுழிபுரம்

## அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான ஏகதின இலக்ஷார்ச்சனைப் பெருவிழா

நிகழும் விக்கிரம வருடம் தை மாதம் 28 ஆம் நாள் நாளை [10-02-2001] **சனிக்கிழமை காலை 8 30 மணிக்கு** அர்ச்சனை ஆரம்பமாகும். பிற்பகல் 2.30 மணிக்கு அக்னி முகாந்தம், தர்ப்பணம் என்பன நடைபெற்று மாலை சண்டிஹோமம், தாராஹோமம், விசேட திரவியஹோமம் முதலியன நடைபெறும் அதனைத் தொடர்ந்து விசேடமாக அலங்கரிக்கப்பட்ட அன்னச்சப்பறத்தில் அம்பாள் வீதி உலாவருவார்.

**தேவஸ்தான பரிபாலன சபையினர்.**

(83840)

---

இதோ!

## கொழுப்பு நீக்கிய பால் (SKIMED MILK)

## விற்பனைக்கு

எமது சங்கத்தில் சுத்தமான பசுப்பாலில் இருந்து உற்பத்தி செய்யப்பட்ட கொழுப்பு நீக்கிய பால் விற்பனை செய்யப்படுகிறது. யாழ். நகரிலும் சூழவுள்ள கிராமங்களிலும் நேரடி விநியோகம் செய்கிறோம். தேவையானவர்கள் முற்கூட்டியே பதிவு செய்து பாலை உங்கள் வீட்டு வாசலில் பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடு செய்கிறோம்.

ஒரு லீற்றர் பாலின் விலை
ரூபா 14/- மட்டுமே.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**பொது முகாமையாளர்**
**யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம்,**
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய். (சி/15218)

---

## மங்களகரமான திறப்பு விழா

அன்புடையீர்,

நிகழும் விக்கிரம வருஷம் தை 28 ஆம் நாள் நாளை (10 - 02 - 2001) சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் 9.30 மணி வரை உள்ள சுப முகூர்த்த வேளையில் ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் எம்மால் புதிதாக அமைக்கப்பட்டுள்ள

## விநோதன் கூல் (B) பார்

என்னும் ஸ்தாபனத்தை திறந்து நடத்த இறைவன் திருவருள் கைகூடியுள்ளதால் அத்தருணம் அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரும் வருகை தந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றேன்.

நன்றி.

தங்கள் நல்வரவை நாடும்
**க. யோகராஜா**

பலாலி வீதி,
கோண்டாவில்.

(83915)

# 4 வருடங்கள் சிறையில் வாடிய உரும்பிராய் இளைஞர் விடுதலை

கொழும்பு,பெப்.9

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கடந்த 4 வருடகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞர் ஒருவர் கொழும்பு மேல் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

உரும்பிராயைச் சேர்ந்த சுப்பிரமணியம் குணசீலன் (வயது 29) என்பவருக்கு எதிராகப் பயங்கர வாதத் தடைச்சட்டத்தின் கீழ் தாக்கல் செயயப்பட்டிருந்த வழக்கு வாபஸ் பெறபட்டதை அடுத்தே கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திருமதி சந்திரா ஏக்கநாயக்க எதிரியை விடுதலை செய்ய உத்தரவிட்டார். இவ்வழக்கில் 1996 ஆம் ஆண்டு தை மாதம் 1 ஆம் திகதிக்கும் அதே வருடம் புரட்டாதி மாதம் 12 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் கொழும்பு கொட்டாஞ்சேனையில் கைத்துப்பாக்கி, 4 மெகஸின்கள், 50 தோட்டாக்கள் மற்றும் குண்டுகள் என்பவற்றைத் தமது உடைமையில் வைத்திருந்ததாக அவசரகாலச் சட்டத்தின் கீழ் எதிரி மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

மேற்குறிப்பிடப்பட்ட பொருள்களுடன் சயனைட் வில்லை ஒன்றும், எதிரியினால் உதவிப் பொலஸ் அத்தியட்சர் ஒருவருக்கு அளிக்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலமும் சான்றுப் பொருள்களாகக் குறிப்பிடப்பட்டிருந்தன.

எதிரியின் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தைப் பதிவு செய்த கொழும்பு குற்றப் புலனாய்வுப் பணியகத்தைச் சேர்ந்த ஏ.எஸ்.பி.கே.ஏ.எஸ்.தர்மவர்த்தன இறந்துவிட்டதால் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை நிரூபிக்க முடியாமல் இருப்பதாக அரச சட்டவாதியினால் நீதிமன்றத்தில் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்தது.

எதிரியைக் கொழும்பிலுள்ள தனியார் விடுதியொன்றில் வைத்து 96 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 12 ஆம் திகதி கைது செய்த இராணுவச் சிப்பாயான எஸ்.ஜி.விமலரத்னவும் இறந்து விட்டார் என்றும் அரச சட்டவாதி தெரிவித்திருந்தார். அதை அடுத்து எதிரியின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா குற்றச்சாட்டுப் பத்திரத்தை வாபஸ் பெறுவது பற்றி அரச தரப்பு பரிசீலிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தார்.

அரச சட்ட வாதியின் விண்ணப்பத்தை அனுமதித்த நீதிபதி எதிரியை விடுதலைசெய்யுமாறு உத்தரவிட்டார். (க)

# விளையாட்டுத் துறை தனியான திணைக்களமாக இயங்குகின்றது

வலி.வடக்கு,பெப்.9

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி கலாசார பண்பாட்டு, விளையாட்டுத் துறை அமைச்சில் இருந்து விளையாட்டுத்துறை தனித்திணைக்களமாக இம்மாதம் முதல் பிரிந்து இயங்குகின்றது.

விளையாட்டுத் திணைக்களம் தனியாக மாற்றப்பட்டதைத் தொடர்ந்து ஊழியர்கள் பற்றாக்குறையை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

திணைக்கள பணிப்பாளர் மற்றும் கணக்காளர் போன்ற உயர் பதவிகள் உட்பட எழுதுவினைஞர்கள் போன்ற பதவிகளுக்கும் பற்றாக்குறை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (க-86)

## மெய்வல்லுநர் போட்டி

வடமராட்சி.பெப்.9

நவக்கிரி அ.மி.த.க. பாடசாலை ,இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

அதிபர் செ.செல்வநாயகம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் கோப்பாய் பிரிவு உதவிக் கல்விப்பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ம-173)

* * *

நெல்லியடி, பெப்.9

தொண்டமனாறு, வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி, நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற் பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

வித்தியாலய அதிபர், என்.அரியரத்தினம் தலைமையில் நடைபெறும் இவ் விளையாட்டுப் போட்டியில், வல்வை நகரசபைத்தலைவர் எம்.கே.சிவாஜிலிங்கம் பிரதம விருந்தினராகவும், புலோலி ப.நோ.கூட்டுறவுச் சங்கத் தலைவர் கி.அருமைத்துரை, சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (ம-109)

* * *

இளவாலை,பெப்.9

இளவாலை, புனித ஹென்றியரசர் கல்லூரி இளவாலை, கன்னியர் மட மகாவித்தியாலயம் ஆகியவற்றின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் புனித.கென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ்.கல்வித் திணைக்கள வேலைப் பகுதிப் பொறியியலாளர் சிவபாலன் கலந்து கொள்வார். (ம-48)

* * *

சுழிபுரம்,பெப்.9

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி வருடாந்த மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் கல்லூரி மைதானத்தில் அதிபர் திருமதி அ.வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெறும். (க-28)

## 50 திட்டங்கள் பூர்த்தி

அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தினால் யாழ்.மாவட்டத்தில் கடந்த வருடம் 50 நுண்கருத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-5)

## வடக்கு - கிழக்கு மாகாண

# உள்ளூராட்சி நிறுவனங்களின் மூலதன நிதி திடீர் குறைப்பு

வலி.தென்மேற்கு,பெப்.9

வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அனுமதிக்கப்பட்ட பிரமாண அடிப்படையிலான மூலதன நிதி திடீரென குறைக்கப்பட்டுள்ளது.

2001ஆம் ஆண்டில் ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனத்துக்கும் பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியாக ரூபா 12லட்சம் வழங்க முன்னர் அனுமதி அளிக்கப்பட்டிருந்தது. எனினும் தற்போது இந்த நிதி 10லட்சம் ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

திட்டமிடல் அமைச்சின் இந்த அறிவிப்பைத் தொடர்ந்து வடக்கு - கிழக்கு உள்ளூராட்சி நிறுவனங்களால் ஏற்கனவே 12லட்சம் ரூபாவுக்கென முன்மொழியப்பட்டுள்ள திட்டங்களில் 10 லட்சத்துக்கான திட்டங்கள் முன்னுரிமை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும் என்று வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் அறிவித்துள்ளார். (ம-185)

# எழுதுநர் பரீட்சைப் பெறுபேறு இங்கு பலருக்கு கிடைக்கவில்லை

யாழ்ப்பாணம்,பெப்.9

மாகாண பொதுச்சேவையைச் சேர்ந்த எழுதுநர்களை தரம் **II** 'அ' பிரிவுக்கு பதவி உயர்த்துவதற்காக கடந்த ஆண்டு நடத்தப்பட்ட பரீட்சையில் சித்தியடைந்தோரின் பெறுபேறுகள் சிலருக்குக் கிடைத்துள்ளன.

யாழ்.மாவட்டத்தில் இருந்து இப் பரீட்சைக்கு நூற்றுக்கணக்கானோர் தோற்றி இருந்தனர். சித்தியடைந்தவர்களின் பெறுபேறுகளை வடக்கு-கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு தபால் மூலம் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பிவைத்துள்ளது

தபால் விநியோகத்தில் நிலவும் தாமதம் காரணமாக பலருக்கு பெறுபேறு கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பரீட்சையில் சித்தியடைந்தோரின் பட்டியலை பொதுச் சேவை ஆணைக்குழு யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி உதவவேண்டும் என்று பெறுபேறு கிடைக்காத பரீட்சார்த்திகள் கோரியுள்ளனர். (ஐ)

## கஸகிஸ்தானில் அநாதரவான

# 24 இலங்கையர் 17 ஆம் திகதி கொழும்புக்கு வருகின்றனர்

கொழும்பு,பெப்.8

ஜேர்மனி எனக்கூறி கடந்த, டிசம்பர் மாதம் முன்னாள் சோவியத் குடியரசைச் சேர்ந்த கஸகிஸ்தானில் கைவிடப்பட்ட 24 இலங்கையர்களும எதிர்வரும் 17 ஆம் திகதி இலங்கைக்குத் திருப்பியனுப்பப்படவுள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த டிசெம்பர் மாதப் பிற்பகுதியில் 25 இலங்கையரிடம் பெருமளவு பணத்தைப் பெற்ற சிலர், இவர்களை ஜேர்மனியில் கொண்டுபோய் சேர்ப்பதாகக் கூறி கஸகிஸ்தான் எல்லைக்குள்விட்டு இதுதான் ஜேர்மனி எனக் கூறிவிட்டுச் சென்றிருந்தனர்.

அப்பகுதியில் கடும் குளிருக்குள 4 நாளகளுக்கு மேலாக நடந்து சென்ற 25 பேரில் ஒருவர் விறைத்து இறந்து போய்விட்டார். மற்றைய 24 பேரும் கஸகிஸ்தான் எல்லைப் படையினரால் பிடிக்கப்பட்டு தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் எதிர்வரும் 14 ஆம் திகதி 'அல்மெற்றி' என்ற இடத்திற்கு அழைத்து வந்து அங்கிருந்து 17 ஆம் திகதி இந்தியாவின் தலைநகர் புதுடில்லிக்குக் கொண்டு வரப்பட்டு பின்னர் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் ஒவ்வொருவரையும் இலங்கைக்கு அனுப்பி வைப்பதற்கு தலா 600 டொலர் செலவு ஏற்படுவதாக இவர்களைக் கொழும்புக்குக் கொண்டு வரவுள்ள சர்வதேச குடியகல்வு அமைப்பு தெரிவித்துள்ளது. (க)

## பல்கலைக்கழக மாணவர் ஒன்றியக் கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.9

யாழ்பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் விசேட பொதுக்கூட்டம் இன்று காலை 9.30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் முக்கிய தீர்மானம் ஒன்று எடுக்கப்படவுள்ளதால் அனைத்து பீட மாணவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு மாணவர் ஒன்றியப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (ம-6-ரி)


மக்ஷல் ஹவுசின் புதிய சலுகை

இப்போது உங்கள் தெரிவுக்கேற்ப புதிய உத்வேகத்துடன் NINE HEARTS, PHOTO CHROME, CHLAGE, ACME, KODA PHOTO EXEPRICE ஆகிய நிறுவனத்துக்கு படச்சுருள்கள் அனுப்பி பிரதியாக்கம் செய்து மிக விரைவில் பெற்றுத்தர ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

20, யுபிலி பஜார்,
யாழ்ப்பாணம்.

(83957)



இலங்கை மின்சார சபை - யாழ்.பிரதேசம்

மின்தடை பற்றிய அறிவித்தல்

வளாக வீதியிலுள்ள பிரதான மின் நிலையத்தில் (Parameshwara Primary Sub Station) அவசர திருத்த வேலைகள் செய்ய வேண்டியிருப்பதனால் யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்திற்கு 11.02.2001 ஞாயிற்றுக்கிழமை காலை 0900 மணி முதல் மாலை 0500 மணி வரை மின்சாரம் தடைப்பட்டிருக்கும். திருத்த வேலைகள முடிவடைந்தால் குறிக்கப்பட்ட நேரத்திற்கு முன்னதாக மின் வழங் கப்படும் என்பதை பாவனையாளர்களுக்கு அறியத்தருகின்றேன்.

இதன் காரணமாக மின் பாவனையாளர்களுக்கு ஏற்படும் சிரமங்களுக்காக மனம் வருந்துகின்றேன்.

பிரதேச மின் பொறியியலாளர்,
இலங்கை மின்சார சபை,
யாழ். பிரதேச அலுவலகம்,
சுன்னாகம்.

"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும"
இலங்கை மின்சார சபை (C/15223)



வந்துவிட்டது

* COMPUTER
* SCANNER
* UPS
* PRINTER
AND
* ASSESORIES

V.K.RAJARATNAM,
95, Stanley Road,
Jaffna. (83958)



புதிய வகுப்புக்கள்

HAIR STYLE
கேக் ஐசிங்
(3 மாத பயிற்சி வகுப்புகள்)
10-02-2001 சனி
3 மணிக்கு
ஆரம்பமாகின்றன.

தூரிகை
செங்குந்தா வீதி,
கல்வியங்காடு (83943)



Special English
Course for:-
A/L, G.A.Q, university students and Workers
Sat., Sun. 4.30 P.m
BY:- Mr.Ra.Rajesh (B.A)

English Literature
Gr. 10 + 11
BY:- Mr. Jeyakumar (B.A)

SHAMROCK
29/3,J/Somasundram Avenue
(83923)



கணக்கீடு
A/L 2001
S.L.A.S
ஆரம்பம்: இன்று 4.00 p.m
புதன், வெள்ளி 4.00 p.m.
கம்பனி
ஆரம்பம்: நாளை 4.00 p.m.
சனி,ஞாயிறு, திங்கள் 4.00 p.m
S. தவா
(B.Com. (Hons)[Acc.Spl]
NEW SCIENCE COLLEGE
JAFFNA (83930)



ஓம் நமோ பகவதே ராமகிருஷ்ணாய

அன்புடன் அழைக்கின்றோம்

எமது அன்புக்குரியவர்களே!

சுவாமி விவேகானந்தரின் குருவாகிய பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் அவதார தினத்தினை எதிர்வரும் 25.02.2001 அன்று ஒரு விழாவாக எங்களுடன் கலந்து கொண்டாடுவதற்கு மிகவும் மகிழ்ச்சியுடன் உங்களை அழைக்கின்றோம். இந்தப் புனித நன்னாளைக் கொண்டாடுவதற்கு பணம் மிக மிக அவசியமாகின்றது. இத் திருப்பணியுடன் இணைந்த சமூக சீர்திருத்தத்துக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று தோன்றினால் பணம் தந்து உதவுங்கள். உங்கள் நன்கொடையினை நாங்கள் பகவான் சார்பில் மிக்க நன்றியுணர்வுடன் தி.கண்ணன் (15/10, இராமநாதன் வீதி, கொக்குவில்) என்பவர் மூலம் ஏற்றுக்கொள்வோம்.

-ஆன்மீக நாட்டமுள்ள இளைஞர்கள் - (83959)



BEACON
(வெலிங்டன் சந்திக்கு அருகில்)
A/L 2003 (கலைப்பிரிவு)
ஆசிரியர் குழு

| | | |
|---|---|---|
| அளவையியல் | - | S.S. மனோகரன் |
| தமிழ் | - | செல்வி பங்கயச்செல்வி |
| இந்து நாகரிகம் | - | சுரேஸ் |
| கிறிஸ்தவ நாகரிகம் | - | சுமித்திரா |
| நாடகமும் அரங்கியலும் | - | ஸ்ரீ கந்தவேள் |
| புவியியல் | - | ஞானேஸ்வரன் |

ஆரம்பம்: நாளை 10.02.2001 சனி
நேரம்: காலை 9 மணி (ப.நே)
(83943) -நிர்வாகி

# அரசாங்கம் மீண்டும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
70 லட்சம் ரூபா.

பாதுகாப்புச் செலவுக்கென 6,339 கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது சென்ற வருடத்தைவிட 20 சதவீதம் அதிகமானதாகும். விடுதலைப் புலிகளை எதிர்த்துப் போராடுவதற்காக நவீன கனரக இராணுவத் தளபாடங்களை கொள்வனவு செய்வதால் சென்ற வருடத்துக்கான செலவு எதிர்பாராத விதமாக உயர்ந்தது என்றும் -

இந்த ஆண்டும் போர் தொடரும் பட்சத்தில் பாதுகாப்புச் செலவினம் மேலும் உயரும் என்றும் அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர்.

இவ்வருடத்துக்கான கடன்படு தொகை எப்போதும் இல்லாதவாறு 24,700 கோடி ரூபாவாக உயர்ந்துள்ளது. கடந்த வருடத்தின் கடன்படு தொகை 16,900 கோடி ரூபாவாக மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இந்த வருடம் அது 46 சதவீதத்தால் உயர்ந்துள்ளது.

போர்ச் செலவு இவ்வாறு அதிகரிக்கப்பட்டுள்ளதால் நாட்டின் பொருளாதாரம் மேன்மேலும் பாதிப்புறும் என்று பொருளியல் நோக்கர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

சமாதானப் பேச்சுக்கான ஆயத்தங்களைச் செய்துவரும் வேளையில் போர் பட்ஜெட் ஒன்று தயாரிக்கப்பட்டிருப்பது விசனத்துக்குரியது என்றும் அவர்கள் தெரிவித்தனர். (அ)

# கைதடி வீடுகளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கைதடி வடக்கு (288), கைதடி கிழக்கு (289), கைதடி மத்தி (290), கைதடி தெற்கு (291), கைதடி தெற்கு கிழக்கு (292), கைதடி மேற்கு (293).

தென்மராட்சி பிரதேச செயலரையும் மேற்குறிப்பிட்ட பிரிவுகளின் கிராம சேவை அலுவலர்களையும் இன்று காலை கோப்பாய்ச் சந்திக்கு சமுகளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் தமது வீடுகளைப் பார்வையிட்ட பின்னரே அங்கு மீளக் குடியமர்வது பற்றித் தீர்மானிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-5)


## வெளிவாரிப் பட்டப்படிப்புகள் பிரிவு
## யாழ்ப்பாணக் கல்லூரி
(யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாக)

பின்வரும் கற்கை நெறிகளுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகின்றன.

1ST in Com. - யாழ்.பல்கலைக்கழகம்.
G.A.Q. - யாழ்.பல்கலைக்கழகம்.
G.A.Q. - பேராதனைப் பல்கலைக்கழகம்.
B.A. Part I - யாழ்.பல்கலைக்கழகம்.
B.A. Part II - யாழ்.பல்கலைக்கழகம்
B.A.Final - பேராதனைப் பல்கலைக்கழகம்.

குறிப்பு:
- ஆங்கில இலக்கியம், மொழியியல் உட்பட எல்லாப் பாடங்களும் போதிக்கப்படும்.
- விரிவுரைகளுக்கு மேலதிகமாக Tutorial Class, கட்டுரை வகுப்புகளும் பிரபல விரிவுரையாளர்களினால் மேற்கொள்ளப்படும்.
- வார இறுதி வகுப்புகள் யாழ்ப்பாணத்திலும் வார நாள் வகுப்புகள் வட்டுக்கோட்டையிலும் இடம்பெறும்.
- நூலக வசதி சகல மாணவர்களுக்கும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் .

**ஆரம்பம்:** நாளை (10-02-2001) சனிக்கிழமை

விவரங்களுக்கு :-
பதிவாளர்
யாழ்ப்பாணக் கல்லூரி,
பட்டப்படிப்புகள் பிரிவு,
(போதனா வைத்தியசாலைக்கு முன்பாக ,
வர்த்தக வங்கிக்கு அருகில்)
(C/15189)



இன்றைய புதியவீடியோ CD வெளியீடு.
மாதவன், அப்பாஸ்
★ மின்னலே ★
புதிய போஸ்ரர் விற்பனைக்குண்டு
விஷ்ணு வீடியோ
K.K.S. Road கோண்டாவில்.
(C/15227)



நாளை ஆரம்பம்!
கம்பனி முடிவுக் க/கு
A/L 2001
காலை 9 மணி
கணக்கீடு
D.SAM
DMI
யாழ் நகர்.
(C/15216)



எமது பிரமிட் வீடியோ CD வெளியீடுகள்
- கடமை கண் ... ட்டுப்பாடு
- துலாபார...
- என் கட...
- வரவு நல்ல உறவு
- எதிர் நீச்சல்
- ராஜ பார்வை
- கணவன்
- அன்றும் இன்றும் (விஸ்வநாதன் இராமமூர்த்தி இசை நிகழ்ச்சிகள்)
- T.M.S. சுதா இசை ...ழ்ச்சி
- கரிகாலன் ஆடல் பா...

வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(C/15224)



## பூப்புனித நீராட்டு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விக்கிரம வருஷம் தை மாதம் 28ஆம் நாள் நாளை (10.02.2001) சனிக்கிழமை பகல் 10.30 – 12.30 மணி வரையுள்ள அபர பட்ச துதியையும் பூர நட்சத்திரமும் சித்த யோகமும் இடப இலக்கினமும் பொருந்திய சுப முகூர்த்த வேளையில்,

எமது புத்திரி
திருவளர் செல்வி தமிழ்ச்செல்வி அவர்களுக்கு

எமது இல்லத்தில் பூப்புனித நீராட்டு விழா செய்ய திருவருள் கூடி பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து செல்வியை ஆசீர்வதித்து மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்
திரு.திருமதி தி.தங்கராசா
(தங்கப்பழம்)
குடும்பத்தினர்.

*தம்பசிட்டி வீதி,*
*புலோலி மேற்கு,*
*பருத்தித்துறை.*
(C/15229)


## மரண அறிவித்தல்

அருட்செல்வி
**மேரி எமிலி வஸ்தியாம்பிள்ளை (தி.கு.)**

கரம்பொன்னைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ். திருக்குடும்ப சபையின் துறவியும் இளைப்பாறிய யாழ்.ஆயர் அதிவண. தியோகுப்பிள்ளை அவர்களின் சகோதரியுமாகிய அருட்செல்வி மேரி எமிலி வஸ்தியாம்பிள்ளை நேற்று (08-02-2001) வியாழக்கிழமை யாழ்.திருக்குடும்ப மாகாண இல்லத்தில் காலமானார்.

இவரது பூதவுடல் நாளை(10-02-2001) சனி காலை 8.00 மணிக்கு திருக்குடும்ப மாகாண இல்லத்தில் இருந்து புனித மரியாள் பேராலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலியின் பின் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் துறவியர், அருட்தந்தையர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

திருக்குடும்ப மாகாண இல்லம்,
*121, பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(C/15228)

தகவல்:
அருட்செல்வி மேரி வீர்ஜிர்
(மாகாண ஆலோசகர்)


## மாபெரும் கண்காட்சியும் விற்பனையும்
### (பூங்கன்றுகளும் கனிமரங்களும்)
பிரவேசம் இலவசம்
யாழ். குடாநாட்டில் இப்படியும் ஒரு பூங்காவா.....!
# பூங்கனிச் சோலை

எதிர்வரும் 10ஆம்,11ஆம் (சனி,ஞாயிறு) திகதிகளில் காலை 8 மணி முதல் இரவு 9 மணி வரை வடபகுதியில் எங்குமே பார்த்திராத புதிய மேருகுடன் வடிவமைக்கப்பட்ட இயற்கை எழில் நிறைந்த, பசுமையான, கண்ணைக் கவரும் காட்சிகளுடன் பூங்கனிச்சோலைக்குள் ஒரு பூங்கனிப் பூங்கா அமைந்துள்ளது.

- அலங்கார வளைவுகள்
- சிறுவர்களுக்கான சுழல் கதிரைகள்
- சுழல் குடை
- பல வர்ண மீன்கள்
- பல்லினப் பறவைகள்
- இராட்டினம்



- பல வர்ண மின்குமிழ் பூம்பந்தல்
- மலை அருவி
- பசும் புற்றரைகள்
- புல் மேடைகள்
- சொகுசு ஊஞ்சல்
- தண்ணீர்த் தொட்டிகள்

❋ பல புதுமைகள் நிறைந்த தண்ணீர் சிந்திகள்.

**எம்மிடம் விற்பனைக்குள்ள பூங்கன்றுகள்:-**
பல வர்ண ரோஜாச் செடிகள், செவ்வரத்தை, பல இன குறோட்டன்கள், சைப்பிறஸ், அரக்கெரியா, மொசந்தாஸ், ஐந்தூரியம், அஸ்பரஸ் மற்றும் பல...

**விற்பனைக்கு உள்ள கனிமரங்கள்:-**
மாங்கன்றுகள், எலுமிச்சை, தோடை, மினி எலுமிச்சை, பலாக்கன்றுகள், ஈரப்பலா, ஜம்பு நாவல், 1Kg கொய்யா, மற்றும் பயன்தரு கனிமரங்களும்...

*எமது மண்ணிலுள்ள உள்ளூர் வளங்களைக் கொண்டு மேலைத்தேய காட்சிகளுக்கு நிகராக அமைந்துள்ள பூங்கனிச் சோலையின் எழிலை நேரில் பார்த்து மகிழ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

**புதிய அறிமுகமும், விற்பனையும்:-**
பிளாஸ்ரிக் சாடிகள் (கையிருப்பில் குறைவாக உள்ளன)

குறிப்பு:- வீடியோ, புகைப்படப் பிடிப்பாளர் கவனத்திற்கு!
❋எதிர்வரும் 10ஆம், 11ஆம் திகதிகளில் வீடியோ மற்றும் வெளிப்புற படப்பிடிப்புகளை தவிர்த்து ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.
❋எமது புகைப்படப் பிடிப்பாளர்களால் புகைப்படம் எடுத்துக் கொள்ள கண்காட்சி நாள்களில் விசேட ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
❋பாடசாலை மாணவர்களுக்கு 12ஆம் திகதி ( திங்கட்கிழமை) ஒதுக்கப்பட்டுள்ளது.

முட மாவடி, திருநெல்வேலி.
(நல்லூர் பின் வீதியில் இருந்து வடக்கு பக்கமாக 1500 யார் தூரத்தில்)
T.P.021-2976
(C/15205)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.02.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.